65

காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை

மலர் 1 இதழ் 5



அந்திக்கலம்பகம்

மனோன்மணி இன்னும் இரண்டு வாரம் கழித்துத்தான் வர முடியுமாமே...

கடிதம் வந்ததா? என்ன வேலைத் தொந்திரவோ என்னமோ, யார் கண்டார்கள்?

ஒரு சமயம், கல்கத்தாவிலிருந்து கிளம்பி வேறு ஏதாவது ஊர்களைப் பார்த்துவிட்டு பிறகுதான் இங்கே வருவது என்று திட்டமோ என்னமோ, போனால் போன இடம் என்பார்களே அதுபோல இருக்கு...

பொன்னி! பட்டு சொல்வதோட அர்த்தம் விளங்குதா......போனல் போன இடம்! மனோன்மணி இங்கு இதுவரையிலே வரவில்லை என்பதற்காகவா பட்டு இந்தப் பேச்சு பேசுகிரு...

ஏமு! இப்படி கேலி பேசாவிட்டா உனக்குத் தூக்கமே பிடிக்காதா! நான் உள்ளபடி மனோன்மணி போய் இத்தனை நாள் ஆகிவிட்டதே என்றுதான் இதைச் சொன்னேன்...

தப்பு என்ன பட்டு! என் தம்பி ஞாபகமாகவே நீ இருந்தால்தான் அதிலே என்ன தப்பு. அடித்துச் சொல்லேன் ஆமாம் எனக்கு அவருடைய ஞாபகமாகத்தான் இருக்கு என்று.

உண்மையாச் சொல்றேன் பொன்னி! எனக்குத் தெரிந்தவர்கள் ஒரு சங்கம் நடத்திக் கொண்டிருக்கா. அந்த சங்கத்திலே, ஒரு நாளைக்கு மனோன்மணி வந்து பேச வேண்டுமாம். கேட்டபடி இருக்கிரு. அதனாலே, இன்னும் வரவில்லையேன்னு கேட்டேன்...

அதென்ன, மனோன்மணியே வந்து பேசணும்னு. ஏன், நம்ம பொன்னியைப் பேசச் சொல்லலாமே...

வைத்திய சாஸ்திர விஷயமான பேச்சாக இருக்கவேண்டுமாம்...

இதென்னடி வேடிக்கை! வைத்திய சாஸ்திர விஷயமாகப் பேசுகிற சங்கமா அது.

உன்னோட கேலிப் பேச்சுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்று பார்த்தாலும், முடியல்லே. ஏமு! வைத்திய சாஸ்திர விஷயமாகன்னு பொதுவாச் சொன்னேன். அந்தச் சங்கத்திலே, குடும்ப கட்டுப்பாடு பற்றிய பேச்சு வேண்டுமாம்...

இது உள்ளபடி வேடிக்கை தாண்டி! குடும்ப கட்டுப்பாடு பற்றிப் பேச, மனோன்மணிக்கு என்ன தெரியும்...உனக்குந்தான் என்ன புரியும்...

(13-ம் பக்கம் பார்க்க)



உணர்ந்தோர் உள்ளம் குமுறுகின்றனர்

மலர் 1.] 23--8--64 [இதழ் 5

தமிழ் நாட்டில் இந்திக்கு எதிர்ப்பே இல்லை; பலர் அந்த மொழியை விரும்பிப் படிக்கின்றார்கள் என்றெல்லாம் நமது அமைச்சர்கள் கூறக் கேட்கின்றோம். இவர்கள் கூறக் கேட்டு, நம்பும் மத்திய அமைச்சர்களில் சிலரும் சில சில நேரங்களில் அதேபோல் சொல்லுகின்றனர். ஆனால் உண்மை நிலையோ நேர்மாறானது. தமிழ் நாட்டில் பலர் இந்தித் திணிப்பைக் கண்டிக்கின்றனர்.

இந்தியினால் தங்களுக்கு வர இருக்கும் பேராபத்தைப் பலர் உணருகின்றனர். உண்மைகளை உள்ளபடி உணர்ந்தறிவோர் தாங்கள் உணர்ந்ததைத்துணிவோடு எடுத்துக் கூறிடுகின்றனர்.

டாக்டர் இலக்குவனாரை ஆசிரியராகக் கொண்டு மதுரையிலிருந்து வெளிவரும் ‘குறள் நெறி’ என்னும் இதழில்.

‘இந்தி கட்டாயமில்லை என்று நடுவண் அரசும் அதற்கு ஒத்து ஊதிக்கொண்டு தமிழ்நாட்டு அரசும் (இல்லை, தப்பு. தப்பு, சென்னை ராச்யமும்) இந்தியைத் தமிழ் நாட்டில் நுழைக்கும் பணியில் வெற்றிபெற்று விட்டன.

(1) தமிழ்நாடு என்று பெயரிடத் தமிழக அரசு மறுத்துவிட்டது. அமைச்சர் ஒருவர், ‘மெட்ராசு ஃஸ்டேட்’, என்பது இரண்டு ஆண்டுக்கு முன்னரே எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது; ஆதலால் அது தீர்ந்துபோனசெய்தி; இனி அதைப்பற்றிப் பேசத் தேவையில்லை என்று வெட்டவெளிச்சமாக்கிவிட்டார்.

(2) தமிழ் நாட்டுக் கல்விக்கூடங்களில் பாடம் பயிற்றுமொழியாகவிருக்கத் தமிழ் தகுதியற்றது என்று முடிவுகட்டப்பட்டுவிட்டது.

(3) தமிழ்நாட்டுப் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பு முதல் எல்லா மாணவர்களும் கட்டாயம் இந்தி படித்தே ஆகவேண்டும் என்பதும். பதினோராம் வகுப்பு அரசியல் தேர்வுக்குப் போகும் மாணவர்கள் இந்தியிலும் தேர்வு எழுதவேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டுவிட்டன, வருகிற பொதுத் தேர்வுக்குக் குறைந்த மதிப்பெண் இத்தனை பெறவேண்டுமென்று வற்புருத்தவிருக்கின்றனர்.

(4) தமிழகக் கல்வியமைச்சர் உயர்திரு. பக்தவத்சலம் அவர்கள் சட்டமன்றில் ஒரு கேள்விக்கு விடையளிக்குங்கால் “தமிழ்நாட்டு மாணவர்களும், பொது மக்களும் இந்தியை விரும்பிப் படிக்க முன்வரும்போது அரசாங்கம் படிக்கக்கூடாது என்று தடுக்கமுடியுமா?” என்று கூறியுள்ளார்.

(5) இந்தியை எதிர்த்து ஒழித்தே தீருவோம். தமிழகத்தில் இந்தியை புகவிடமாட்டோம்’ என்று ஆணவம் பேசி இந்தியப்பாராளுமன்றில், சட்டத்திற்குப் புறம்பாக, தமிழில் பேசிப் பெரும் புரட்சி செய்த தமிழ்த் தாயின் தவமகன் ஒருவர் இன்று இந்திக் கோட்டைக்குள் புகுந்து அடைக்கலமடைந்துவிட்டார். இஃது இவர் தமிழ்த்தாய்க்குச் செய்த பெருங்கேடும், நன்றி கெட்ட செயலுமாகும். தன்னலம் காரணமாகத் தாயைப் பணயம்வைக்கத் துணிந்துவிட்டார்: இவர் ஒருவர் மட்டுமா? ஒரு இலக்கம் தமிழ் மறவர்களையும் உடன்கொண்டு சென்றுவிட்டாராம்.

(6) நடுவணரசால் நடத்தப்பெறும் பள்ளிகளிலும் அலுவலகங்களிலும் இந்தி முதன்மை பெற்றுவிட்டது. இந்தியக் கூட்டு பொது ஊழியர் குழுத் தேர்வு (I. U. P. S. C. E.)க்கு இந்தியில் எழுதவேண்டும்; தெரியாதவர் சிலகாலம் ஆங்கிலத்திலும் எழுதலாமாம்.

(7) தமிழக அஞ்சல் துறை, இருப்புப் பாதைத் துறைகளில் தமிழுக்கு இடமில்லாமற் போய்விட்டது. “எல்லாம் இந்தி மயம்”. அத்துறைகளில் பணியாற்றும் அலுவலர்கள் யாவரும் இந்தி கற்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகின்றனர். கையொப்பம் கூட இனி இந்தியிற்றான் போடவேண்டுமாம்.

(8) பேராயக் கட்சித் தலைவர்கள்—பச்சைத் தமிழர் காமராசர் உட்பட—தமிழ் மக்கள் இந்தியைக் கற்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூறிவருகின்றனர்,

கற்காவிட்டால் அரசாங்க அலுவல் கிடைக்காமல் பின்னல் வருந்த நேரும் என்று தமிழக முழுதும் பறை சாற்றித் திரிகின்றனர்.

(9) இந்திய அஞ்சலகங்களில் இனி(தந்தி) கம்பிச் செய்தி யனுப்பப் பதினன்கு மொழிகளில் எதனை வேண்டுமாயினும் பயன்படுத்தலாமாம். ஆனல், தேவ நாகரி எழுத்துக்களால் எழுதிக் கொடுத்தல் வேண்டுமாம். அதற்குரிய புத்தகங்கள் அணியமாயுளவாம்.

(10) தமிழக இருப்புப் பாதை நிலையங்களின் பெயர்ப் பலகைகளில் இந்திக்கு முதன்மை கொடுத்ததை எதிர்த்து அழித்து தமிழுக்கு முதலிடம் அளிக்கச் செய்த தமிழர் தலைவர் என்று போற்றப்பட்ட பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்களும் தமிழுக்குக் கல்லறை கட்ட கற்களை அணியம் செய்து கொண்டு, எல்லாரையும் பேராயக் கட்சியில் சேரும்படி தூண்டுதல் செய்துகொண்டும், சேருகின்றவர்களைப் பாராட்டிக் கொண்டும், காமராசரின் புகழ் பாடிக்கொண்டும், உலா வருகிருர். அவர் கட்சியாகிய திராவிடர் கழகத்தில் உள்ளோரையும் அக்கட்சியில் சேரச் செய்து வருகிருர். தம்முடைய ஆயுட்குப் பிறகு தி. க. வைக் கலைத்து விட்டு எல்லோரையும் அதிலேயே சேரச் சொல்லி வருகிருர்.

(11) "இந்தியை ஒழிப்போம்; வடவர் ஆட்சியினின்றும் தமிழ்நாட்டை மீட்போம்," என்று செருக்கோடு பேசிய "தமிழகப் புலிகள்", பேராயக் கட்சிக் கூண்டுக்குள் போய் அகப்பட்டுக் கொண்டன.

(12) தமிழசப் பேராயக் கட்சியோ தமிழகத்தை வடவர்பால் அடிமைப்படுத்த ஆவனவெல்லாம் செய்து கொண்டு வருகின்றது காரணம் தன்னலமே. தமிழ்த் தாயை அழிக்கும் பணியில் முழுமூச்சாக ஈடுபட்டு விட்டது. தமிழுக்குக் கல்லறை சமைக்க எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டார்கள். விரைவில் வேலையும் முடிந்துவிடும். தமிழ்த்தாய் என்றும் தலையெடுக்காதபடி கல்லறைக்குள் அடக்கமாகப் போகிருள்.

தமிழ்த் தாயின் கட்சிச் சார்ப்பற்ற நன்மக்களே! உங்கள் கடமையைத் தமிழ்த் தாய்க்குச் செய்ய முன்வரப் போகிறீர்களா? அன்றித் தாயைக் கல்லறையிலிடுவதைப் பார்த்துக்கொண்டு வாளாவிருக்க விரும்புகிறீர்களா? தக்கவாறு முடிவு செய்து தாயைக் காப்பாற்ற முனையுங்கள்.

"தமிழைக் கெடுப்பவரைத் தாய் தடுத்தாலும் விடேன்". என்று பாவேந்தர் பாரதிதாசனரின் சூளுரையை எண்ணிப் பார்த்து ஏற்பன செய்க. இப்பொழுது அயர்ந்திருந்தால் பின்னர் பெரிதும் வருந்த நேரும். இடர் வருமுன் காக்க விழிமின்! எழுமின்!! செயல்புரிமின்!!! இன்று ஏமாந்து பின் இடுக்கட்படாதீர்கள்.

என்று புலவர் வி. பொ. பழனிவேலன் அவர்கள் உள்ளக் குமுறலோடு எழுதுகின்ருர்.

சென்னை மாநகராட்சி மன்ற. மேயர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தமக்கேற்பட்ட அனுபவத்தை— அனைத்திந்திய மேயர்கள் மாநாட்டில் ஏற்பட்ட அனுபவத்தை—வேதனையோடு குறிப்பிடுகின்ருர்.

...அந்த மாநாட்டு நிகழ்ச்சிகள் ஆங்கிலத்திலே நடந்துகொண்டிருந்தன. திடீரென, இந்தி மொழி பேசுவோரில் சிலர் இந்தி மொழியில் பேசத் தொடங்கினர்கள். நான் இந்தி பேசாதவன்; ஆகவே அவர்கள் ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்று கேட்டேன், அதற்கு அவர்கள் இணங்கவில்லை. இத்தனைக்கும் அந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய மத்திய சுகாதார அமைச்சர் ஆங்கிலத்திலேயே பேசுமாறு கேட்டுக்கொண்டார். பின்னரும் அவர்கள் இந்தியிலேயே பேசினர்கள். உடனே, சுகாதார அமைச்சர் எழுந்து சென்றுவிட்டார். பிறகு திரு. அஜித் பிரசாத் ஜெயின் தலைமை தாங்க மாநாடு தொடர்ந்து நடந்தது. இந்தி மொழிக்காரர்கள் இந்தியிலேயே பேசினர்கள். நான் ஆங்கிலத்திலே பேசுமாறு கேட்டபோது அவர்கள் இந்தியிலே பேசுவதில் பிடிவாதமாக இருந்தார்கள்...

இது, திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்துப் பத்திரிகைக்கு எழுதியுள்ள கடிதத்தின் ஒரு பகுதி. திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அல்லர். ஆனல் பிரச்சினையைநேராக அணுகுகின்ற காரணத்தால், உண்மையை உணருகின்ருர்; எல்லாரிடமும் நடுநிலையாளர் என்று பேர் பெற்றிருக்கிறவர். அவர் எழுதியதிலிருந்து என்ன தெரிகிறது? பிடிவாதமாக வெறிகொண்டு இந்தியை எங்கும் எப்படியும் திணிக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கிருர்கள் என்பதை உணர முடியவில்லையா?

எவ்வளவு பட்டிருந்தால், அவர் உடனே பத்திரிகைக்குக் கடிதம் எழுதியிருப்பார்! அது மட்டுமா— கோகலே மன்றத்திலே நடந்த மணவழகர் மன்ற விழாவிலே பேசும்போது "தென்னட்டில் நடந்துவரும் இந்தி எதிர்ப்பு இயக்கமானது ஒரு கட்சிக்கு மட்டும் உரியது அல்ல. நானேகூட அதிலே ஈடுபடலாமா என்று பார்க்கிறேன்" என்று கூறியிருக்கிருர். மனமாச்சரியம் இன்றிப் பார்த்தால்தான் இந்தியினல் வர இருக்கும், வந்து கொண்டிருக்கும் பேராபத்து விளங்கும். கொஞ்சமாவது தாய்மொழிப் பற்று இருக்குமானல் உண்மை தெரியும். தமிழுக்கு ஒன்றும் கேடு இல்லை—அஞ்சாதீர்கள்–அவர் இருக்கும்வரை அவரே பார்த்துக்கொள்வார் என்பதெல்லாம் வீண் பேச்சுத்தான்.

இந்த நிலையில் தமிழர்களின் தலைமீது இந்திச் சுமை வந்து உணராதவர்களாக இருந்து, இது ஒரு கட்சிக்கு உரியது என்று தமிழர்கள் இருந்துவிட்டால், எதிர்காலத்தில் நமது மொழிக்கு எப்படி நல்வாழ்வு அளிக்கப் போகிருேம்?

தம்பி

நச்சரவு வளர்க்கின்ருர்!

காணீர் கண்குளிர காந்திமகான் சீடர் இவர்!
தியாகத் தீயினிலே குளித்தெழுந்து வந்திட்டார்!
தொண்டு செய்வதன்றி கொண்டவிரதம் வேறில்லே!
பண்டிருந்த பாரதத்தைக் கண்டிடவே உழைக்கின்ருர்!
காட்சிக்கு எளியரிவர் கடுஞ்சொல்தனே அறியார்!
ஏழை எளியோர்க்கு ஏற்றமது அளித்திடுவார்!
உழைப்பதற்கே உருவெடுத்தார் ஊதியம் பெறுதற்கல்ல!
தொடமாட்டார் பொன்பொருளே கொளமாட்டார் மனமாசு!
பாடுபடும் ஏழைதுயர் பார்த்துப் பதறுகிருர்!
மாடுமனே மக்கள்பெற்று மகிழவழி கண்டிடுவார்!
பாலேயெலாம் சோலேயாகி பைங்கிளிகள் பாடிடவே!
செந்நெல் மணிக்குவியல் சேர்த்திடுவார் நாட்டினுக்கு!
உழைப்பை உறிஞ்சிவரும் உலுத்தரை ஒழித்திடுவார்!
மாளிகையின் சீற்றம்கண்டு மன்னர் அஞ்சிடமாட்டார்
எப்பாடுபட்டேனும் இங்கு இல்லாமை போக்கிடுவேன்!
இதற்கன்ருே இன்னல்பல ஏற்ருேம் பலஆண்டு!
நாட்டினே வாழவைக்க நல்உறுதி கொண்டுவிட்டோம்!
வீட்டை மறந்துவிட்டோம் பாட்டை வகுத்துவிட்டோம்!
நாட்டினுக்கு நற்செய்தி நவின்றதுடன் நில்லாமல்!
நாளும் உழைக்கின்ருர் நாம்வாழ, ஆளவந்தார்!

பாசுரம் இதுபோலப் பலப்பல பாடி, பல்லாண்டு கூறி, வரவேற்றனர் மக்கள் காங்கிரஸ் அமைச்சர்களே, விடுதலே விழா முடித்து அவர்கள் நாடாளத் தொடங்கியதும். தன்னலம் இந்தத் தியாகிகட்கு இருக்க முடியாது; மகாத்மாவின் ஒளியிலே இருந்து இருந்து இவர்கள், எவர்க்கும் எழக்கூடிய சுயநலத்தைச் சுட்டெரித்துவிட்டார்கள்; பரங்கி மூட்டிய அடக்குமுறைத் தீயிலே வீழ்ந்து வீழ்ந்து இவர்கள் புடம்போட்ட தங்கமாகிவிட்டனர்; இவர்கள் குடிமக்களேக் கசக்கிப் பிழிந்து கோலாகல வாழ்க்கை நடாத்தி வந்த குட்டிக் கோமான்களின் வழிவழி வந்தவரல்ல; குண்டுக்கும் தடியடிக்கும், சிறைக்கும் கொடுமைக்கும் தம்மைத்தாமே பலியிட்டுக்கொள்ளத்



துணிந்த தூயவர்கள்; ஏழையுடன் ஏழையாய் இருந்து வந்தவர்கள்; ஏரடிக்கும் சிறுகோலின் மதிப்பை அறிந்தவர்கள்; பசியும் பட்டினியும் கண்டவர்கள்; கோடி கோடியாகக் கொட்டிக் காட்டினுலும் நேர் வழியினின்றும் இம்மியும் வழுவமாட்டார்கள்; இவர்களின் கரத்திலே ஆட்சிப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது, எனவே, ஆடுவமே! பள்ளுப்பாடுவமே!! என்று கொண்டாடினுர்கள்.

மாளிகைகளிலே மந்தகாச வாழ்வு நடாத்திக் கொண்டு, மக்களின் குரலுக்குச் செவிகொடுக்காமல் மதோன்மத்தர்களாக இருந்துகொண்டு, தன் செல்வத்தைப் பெருக்கிக்கொள்ளவே அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அண்ணன் தம்பிகளும், மாமன் மைத்துனரும், அடிவருடி நிற்போரும் ஆனந்த வாழ்வு பெற வழி அமைத்துக் கொடுத்துவிட்டு, இலஞ்ச இலாவணத்தில் புரண்டுகொண்டு, ஊழலாட்சி நடாத்திக் கொண்டு வந்தனரே, உலுத்தர்கள், அவர்கள் அல்ல இப்போது ஊராள வந்திருப்பவர்கள்; இவர்கள் உத்தமர்கள், சத்திய சந்தர்கள், ஊர்வாழத் தாம் உழைக்கும் உயர்ந்தோர், என்றெல்லாம் பேசினர்; போற்றினர்; அஞ்சலிசெய்து அகமிக மகிழ்ந்தனர்.

காங்கிரஸ் அமைச்சர்கள் தவறு செய்யக்கூடியவர்களாக இருக்கமுடியும் என்று எண்ணுவதே இழுக்கு பாபம்; தேசபத்தியின் தூய்மையை உணர்ந்திட முடியாத உன்மத்தர்களின் போக்கு என்றெலாம் இடித்துரைத்தனர், ஆழ்ந்த நம்பிக்கையின் காரணமாக! ஆளவந்தார்களும், அடக்க ஒடுக்கம் காட்டினர், அன்பு சொட்டப் பேசினர், மக்களுடன் பழகினர், அவர் மனக் குறையாதென உசாவினர், தன்னலமற்ற தொண்டாற்ற முனைந்தனர், தழைத்திடும் அறம் இனி, செழித்திடும் மக்கள் வாழ்வு, கொழித்திடும் செல்வம் எங்கும் என்று பலரும் கருதினர்; அந்தி வானத்தின் செந்நிறம் சொக்கவைத்திடுவது போன்றதோர்நிலை இருந்தது; பிறகோ? இருள்! காரிருள்! இருளைத் துணைகொண்டவர் செய்திடும் செயல் பலப்பல!!

தெரியும்! தெரியும்! தேசபக்தன் வேடமிட்டு நீர் நடாத்தும் தில்லுமுல்லுகள்!!

தன்னலமற்ற தியாகியோ! யாரறியார் நீவிர் அடித்த கொள்ளையை! குவித்த பணத்தின் அளவை!!

ஊழல்! இலஞ்சம்! ஓரவஞ்சனை! பழிவாங்குதல்! இவை உமது முறை!

கள்ளமார்க்கட் நடத்துவோர் உமக்கு நண்பர்கள்!

வீடு கட்டிக்கொண்டீர் மாளிகை போல!

விலைக்கு எடுத்துக்கொண்டீர் சர்க்கார் உடைமையை; மலிவாக!

உற்றூர் உறவினருக்கு வழிகாட்டிவிட்டீர், கொள்ளை அடிக்க.

தெரியும்! தெரியும்! உம் தில்லுமுல்லுகள்!

இவ்விதம், கொதித்தெழுந்து பேசுகிறுர்கள் இன்று காங்கிரஸ் அமைச்சர்களைப்பற்றி, பல்வேறு இடங்களில், பலப்பலர். வெட்டவெளிக் கூட்டங்களில் மட்டும் அல்ல; சட்டமன்றங்களில்!!

காங்கிரஸ் அமைச்சர்களையா இப்படி ஏசுகிறீர்கள்? என்று கேட்பவர்களுக்கு, இடித்துரைப்பார் பதிலளிக்கிறுர்கள் காங்கிரசால் அமைச்சர் ஆனவர்களைக் கண்டிக்கிறோம்; நாட்டுமக்கள் சார்பில்; நல்லாட்சி வேண்டும் என்பதற்காக; வீட்டு நெருப்பு என்பதற்காக அதில் வீழ்ந்து புரண்டிடுவார் உண்டோ? என்று கேட்கின்றனர்.

ஆதாரமற்ற புகார்கள். அரசியல் எதிரிகளின் அங்கலாய்ப்பு.

விஷமிகள் கட்டிவிடும் வீண் புரளி.

வேற்று நாட்டானிடம் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளின் தூற்றல் பேச்சு.

இவ்விதமாக, பெருந்தலைவர்கள், கண்டனத்திற்கு இலக்கான காங்கிரஸ் அமைச்சர்கள் சார்பிலே வாதாடினர்; திரையிட்டுப்பார்த்தனர்; பூசிமெழுகிப் பார்த்தனர்; பலன் இல்லை; கண்டனக்கணைகள் சரமாரியாகக் கிளம்பின, துளைத்தன; புனுகுபூசினர் புண்ணின் நாற்றம் போகவில்லை; புறையோடிப்போனபிறகு, கெய்ரான் இருப்பதை ஒப்புக்கொள்கிறுர்கள்; எங்கோ ஓரிடத்தில் எம்மையும் அறியாமல், முளைத்துவிட்டிருந்த களை இது; கழனி முழுதும் அதுவே என்று எண்ணுதீர்கள்; மற்ற இடங்களிலே உள்ளவை, கரும்பு. செந்நெல், கனிவகை மணி : என்று பேசி, ஆத்திரமேலிட்டு எழும் மக்களைச் சமாதானப்படுத்திட முயலுகின்றனர்.

இன்னமும், கெய்ரான் காங்கிரஸ்காரரே! இதனை நாட்டு மக்கள் மறந்துவிடவில்லை; இப்படிப்பட்டவர்இவர் என்று உயர்நீதி மன்றத்து முதல்வரொருவர் அறுதியிட்டுக் கூறியானபிறகும்,

கெய்ரான் காங்கிரஸ் கட்சியில்தான் இருக்கிறுர்.

கெய்ரான் திரட்டிய பெருநிதி அவரிடமே தான் இருக்கிறது.

கெய்ரானின் ஆதரவாளர் காங்கிரசில் தான் உள்ளனர்.

கெய்ரானின் ஆதரவாளர் சட்டமன்றத்திலும் உள்ளனர்.

என்னென்ன காரணம் காட்டினுலும், எத்தனை சமாதானம் சொன்னுலும், எவரெவரைச் சான்றளிக்க வைத்தாலும், குற்றம் குற்றமே என்று தாஸ் அவர்கள் துணிந்து, நேர்மையுடன் தீர்ப்பளித்துவிட்டார்கள்.

இதற்குப் பிறகு, கெய்ரான் முதலமைச்சர் பதவியிலிருந்து வெளிஏறினுரே தவிர, காங்கிரசை விட்டு அல்ல, பொதுவாழ்க்கையை விட்டும் அல்ல. அவர் இப்போதும் பாஞ்சாலத்துக் காங்கிரசில், குறிப்பிடத்தக்க பெரிய புள்ளி!

அவர் மட்டும் அல்ல; அவர் எந்தத் தவறும் செய்தவரல்ல; அவர்மீது கூறப்படுவன யாவும் வீணுன பழி, அரசியல் பகைவர்களின் கோள்; என்றெல்லாம் தாஸ் அவர்களிடம் சாட்சி சொன்னவர்களிலே பலர்

சட்ட மன்ற உறுப்பினர்கள்; அவர்கள் காங்கிரசிலே தான் உள்ளனர்; உயர்தர அதிகாரிகள் பலர்; அவர்கள் இப்போதும் அதிகாரிகளாகத்தான் இருக்கின்றனர். கெய்ரான் ஒருவர்தான் விலகினுர்; அவருடைய 'தர்பாருக்கு'த் துணைநின்றவர்கள், ஆட்சியில் பங்குதாரர்கள்; பரிந்துபேசியோர், நீதிபதி நேர்மையானதுஎன்றுஏற்றுக் கொள்ள இயலாத பொய்க் காரணம் பல காட்டி அவரைக் காப்பாற்றிட முனைந்தோர் அனைவரும், காங்கிரசிலும் இருக்கிருர்கள், சர்க்காரிலும் இருந்துகொண்டிருக்கிருர்கள். ஊழலும் இலஞ்ச இலாவணமும் ஒழிக்கப்பட்டு விடுவதற்கான முழு நடவடிக்கையை காங்கிரஸ் அமைப்பு எடுத்துக்கொண்டாகிவிட்டது என்ரு பொருள்? நேர்மை உள்ளம் கொண்டவர்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

தம்பி! கெய்ரான் விஷயமாக தாஸ் கமிஷன் அறிக்கை வெளிவந்ததே இது முதலாவது என்றும் எண்ணிவிடாதே. இதற்கு முன்பு வேருேர் காங்கிரஸ் தலைவரின் பேரில் ஊழல் குற்றம் சாட்டப்பட்டு, விசாரணைக் குழு அமைக்கப்பட்டது; அறிக்கை கொடுத்தார் விவியன் போஸ்; அந்தக் காங்கிரஸ் தலைவர் பேரில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் ஆதாரமுள்ளவை என்பதாக. என்ன நடந்தது? அந்தக் காங்கிரஸ் தலைவர் அவர் வகித்திருந்த பதவியினின்றும் விலகிக் கொள்ளக் கேட்டுக்கொள்ளப்பட்டார்! ஆனுல் காங்கிரசில் இருக்கிருர்; நீக்கப்படவில்லை!

அதற்கும் முன்னுல் அடிபட்ட முந்திரா விவகாரத்தை மறந்துவிட்டிருக்கமாட்டாய். அந்த ஊழல் குறித்து விசாரணை நடத்தி, அந்த நிகழ்ச்சியிலே டி.டி. கிருஷ்ணமாச்சாரியாருக்கு இருந்த தொடர்பு குறித்து, கருத்து தெரிவிக்கையில், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் வாதம், பேச்சு, ஒப்புக்கொள்ளத் தக்கதாக இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. என்ன நடந்தது அதன் விளைவாக? டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், தாமாகப் பதவி துறந்தார்.

இன்று டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் இந்தியாவின் நிதி மந்திரியாகக் கொலுவீற்றிருக்கிருர்.

முந்திரா விவகாரம் பற்றி விசாரணை நடத்திய சக்ளா இந்தியாவின் கல்வி மந்திரியாக வீற்றிருக்கிருர்.

சக்ளாவை விட பெரிய அந்தஸ்த்து, அமைச்சர் அவையில் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாருக்கு! என்ன பாடம் இதிலிருந்து தெரிகிறது என்று, நேர்மை பட்டுப் போகாத பழய காங்கிரஸ்காரரைப் பார்த்துக் கேள், தம்பி! பெருமூச்சுதான் பதிலாகக் கிடைக்கும்.

எம்முடைய ஆட்சியிலாவது ஊழல் நடப்பதாவது! என்று எக்காளமிட்டு வந்தார்கள். ஒவ்வொன்ருக வெடித்துக்கொண்டு வெளியே வருகிறது. இதனைக் கண்டுபிடிக்க ஒரு குழுவே அமைக்கப்பட வேண்டி நேரிட்டுவிட்டது.

பாஞ்சாலத்தோடு நின்றுவிடவில்லை, 'பாரத புத்ரர்' என்ற பட்டயம் பெற்றுக்கொண்டு பகற்கொள்ளை அடிப்பவர்களின் கதை; படலம் படலமாக வெளிவந்தபடி இருக்கிறது.

ஜெய்பூரில், ராஜஸ்தானத்து முதலமைச்சர் மாகன்லால் சுகாடியா என்பவர்மீது பாய்ந்து,

> தனக்கும் தன் உறவினர்களுக்கும் இலாபம் தேடிக்கொள்ள அதிகாரத்தைப் பயன் படுத்தினுர்.

என்று பலர் பேசியுள்ளனர்.

தாஸ் கமிஷன் போல ஒன்று அமைத்து, முதலமைச்சர்மீது குறிப்பிடும் குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை நடத்தவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.சோஷியலிஸ்டு கட்சியினர் உம்ராவ் சிங் என்பவர்

> உதயபூரில் தவருன முறையில், முதலமைச்சர் நிலத்தைப் பெற்று, அதில் இரண்டு இலட்ச ரூபாய்க்குமேல் பெறுமானமுள்ள வீடு கட்டிக்கொண்டார்.

> பாங்கியில், பல இலட்சம் ரூபாய் சேர்த்து வைத்திருக்கிருர்.

என்று குற்றம் சாட்டிப் பேசிஇருக்கிருர்.

> தவறு! தவறு! இரண்டு இலட்ச ரூபாய் பெறுமானம் உள்ளது அல்ல, என் வீடு. ஒரு இலட்சம் கூடப் பொருது. யாரேனும் ஒரு இலட்ச ரூபாய் கொடுப்பதாக இருந்தால், வீட்டையும் நிலத்தையும் தந்துவிட நான் தயார்!

என்று முதலமைச்சர் சுகாடியா முழக்கமிடுகிருர். அதைக் கேட்டு மற்றவர்கள் வாயடைத்துப்போய்விடவில்லை.

> "சம்மதம்! எல்லா எதிர்க்கட்சியினரின் சார்பிலும் நான் முதலமைச்சரின் அறை கூவலை ஏற்றுக்கொள்கிறேன். நாங்கள் ஆளுக்குக் சொஞ்சம் பணம்போட்டாகிலும் கடன் வாங்கியாவது, சுகாடியா கேட்ட ஒரு இலட்சத்துக்குமேல் ஒரு ஆயிரம் ரூபாய் சேர்த்துத்தருகிருேம். வீட்டைவிற்கத்தயாரா!

என்று ஒரு உறுப்பினர் கேட்கிருர். சுகாடியா பதில் ஏதும் சொன்னதாகத் தெரியவில்லை.

இந்த ஆண்டு இத்தனை இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை விளைநிலமாக்கினேம்,

இந்த ஆண்டு இத்தனைவிதமான புதிய தொழிற்சாலைகளைத் துவக்கி இத்தனை இலட்சம் பேருக்கு வேலை கொடுத்தோம்,

இந்த ஆண்டு கள்ளமார்க்கட் செய்பவர்களைக் கண்டுபிடித்து, அடக்கி, விலைகளை இந்த அளவுக்குக் குறைந்திடச் செய்திருக்கிருேம்,

இந்த ஆண்டு இத்தனை மருத்துவ மனைகள் அமைத்து, இன்னின்ன வியாதிகளினுல் ஏற்படும் கேடுகளைக் குறைத்திட முயன்றிருக்கிருேம், என்றெல்லாம் பேசவேண்டிய இடத்திலே தம்பி! என்ன பேச்சு நடைபெற்றிருக்கிறது, பார்த்தனையா!!

முதலமைச்சர் அக்ரம வழியிலே பணம் திரட்டினுர்; அரண்மனைபோன்ற வீடு கட்டினுர்—என்பது பேச்சு!! இவர்கள், காங்கிரஸ் அமைச்சர்கள்! இந்த இலட்சணமான ஆட்சியைக்கண்டு, மார்தட்டிக்கொள்ளவும், மற்ற எந்தக்கட்சியும் ஆட்சி செய்திடும் ஆற்றல் பெற்றது அல்ல என்று மமதை பேசவும், நாக்கு நீளுகிறது பெருந் தலைவர்களுக்கு, மக்களுக்கு எதுவுமே புரியாது

என்று அவர்கள் ஒரு தப்புக்கணக்குப்போடும் காரணத்தால்.

தம்பி! வீடுகட்டிய விந்தையுடன் முடிந்துவிடவில்லை, ராஜஸ்தானத்து ரசாபாசம்.

கம்யூனிஸ்டு கட்சியினரான இரண்டு உறுப்பினர்கள்,

> பதுக்கல்காரர்கள், திருட்டுச் சரக்கு விற்பவர்கள், கள்ள மார்க்கட் நடத்துபவர்கள், கொள்ளை இலாபம் அடிப்பவர்கள் ... இவர்களுக்கு முதலமைச்சர் சுகாடியா, தாமே முன்னின்று பாதுகாப்பு அளித்து வருகிறார்.

என்று குற்றம் சாட்டினார்கள்.

குல்ஜாரிலால் நந்தா, சாதுக்களை படை திரட்டி, சென்று சேகரிப்பீர் செய்திகளை! என்று அனுப்புகிறாம்! ஏன்? இதோ சட்ட மன்றத்தில், இரு உறுப்பினர்கள், வெளிப்படையாக, விளைவுபற்றி அஞ்சாது, வீரத்துடன் பேசியிருக்கிறார்களே, அவர்களை அழைத்து முழுத் தகவல் தரச் சொல்வதுதானே! அதன்பேரில் விசாரணை தொடங்குவதுதானே! செயல்பட முனைவது தானே! செய்தாரா? செய்வாரா? செய்யமாட்டார்! நந்தா செய்யக்கூடியதெல்லாம், அந்த இரண்டு கம்யூனிஸ்டு உறுப்பினர்களை, இவர்கள் பாதுகாப்புக்கு ஆபத்தை மூட்டுகிறார்கள் என்று கூறி, சிறையில் போட்டடைப்பதுதான். சுகாடியா சிரித்தபடி, நம்சுகானுபவத்தைக் கெடுத்திடத் துணிந்தவர்கள் தொலைவார்கள் என்றெண்ணி உதயபுரி மாளிகையில் உல்லாசமாக இருந்திடுவார்.

தம்பி! கெய்ரான், சுகாடியா போன்ற, குற்றச் சாட்டுக்கு இலக்காகி உள்ள காங்கிரஸ் அமைச்சர்கள் ஆள முற்பட்டபோது, அவர்களை வாழ்த்தவில்லையா வரவேற்கவில்லையா, அவர்கள் நாட்டுப் பற்று, தன்னல மறுப்பு, அறிவாற்றல், பண்பு, ஆகியவை பற்றிப் பலபடப் பேசவில்லையா, காங்கிரசை நடத்திடும் கர்த்தாக்கள். நிரம்பப் பேசினார்கள்! இன்று! சட்டசபையில் சரமாரியாகக் கிடைக்கிறது சவுக்கடி!!

ஒரு துளி அய்யப்பாடு கிளம்பினாலும், விழித்தெழுந்து, விசாரணை நடத்தி, தவறு இருந்தால் கண்டறிந்து கேடு களைந்து, கேட்டினுக்குக் காரணமாக இருந்தவர்களைப் பதவியில் இருந்து மட்டுமல்லாமல், கட்சியிலிருந்தே நீக்கிவிட வேண்டியது முறையாக இருக்க, மூலைக்கு மூலை பேசப்பட்டு, நாறி, அழுகி, தானாக நாற்றமடிக்கிற வரையில், குற்றத்தைக் கண்டு பிடிக்கும் வேலை, களை எடுக்கும் வேலை நடைபெறுகிறதா! கிடையாது!! மாறாக, 'கபர்தார்' குற்றம் கூறாதே! உன் குலையை அறுத்தெடுத்து மாலையாக்கிக் கொள்வேன் என்று கூரை மீதேறிக் கூவுகின்றனர்.

இந்த மிரட்டல்களைப் பொருட்படுத்தாமல், துணிந்து நின்று, குற்றம் குற்றமே என்று கூறத்தக்கவர்கள் எத்தனை பேர் கிடைக்க முடியும்? மிகச் சொற்பம்–

கேரளத்து முதலமைச்சர் சங்கர் மீது குற்றச்சாட்டுகளைத் தொகுத்தெடுத்துக்கொண்டு, காங்கிரஸ் தலைவர்கள் டில்லிக்குச் சென்றனர் என்றோர் செய்தி சென்ற கிழமை வெளிவந்தது.

கேரளத்துக்கு எத்தனை முறை எத்தனை பெரிய பெரிய காங்கிரஸ் தலைவர்கள் சென்று வந்தனர்—சேதி அறிய—பிளவு போக்க—அமைதிகாக்க-ஒன்றுபடுத்த-ஒழுங்குபடுத்த!! தொட்டால் பட்டமரம் துளிர்க்குமாமே அந்தக் காமராஜரும் போய்வந்தார்; இன்றைய 'பாரதப் பிரதமர்' லால்பகதூர் சென்று வந்தார், கண்டு வந்தார், நிலைமை சரியாகிவிடும் என்று செப்பிவிட்டு வந்தார்; மொரார்ஜிதேசாய் போய்வந்தார்; காங்கிரசின் ஒரு செயலாளர் சாதிக்அலி என்பார் போய்விட்டு வந்து, "வெளியே சொன்னால் வெட்கக்கேடு; அப்படி இருக்கிறது கேரளத்தில் காங்கிரஸ் நிலைமை" என்று தெரிவித்தார். இப்போது பட்டியலே தயாரித்துக்கொண்டு, டில்லி பட்டணமே சென்று, முதலமைச்சர் சங்கர் மீது இன்னின்ன குற்றச்சாட்டுகள் உள்ளன என்று கூறுகிறார்கள். மாலை வேளையில் மேடை ஏறியதும் எத்தனை பெரிய முழக்கம், இந்த நாட்டை ஆள நாங்களன்றி வேறு யார்? எவருக்கு உளது அந்த யோக்கியதை? என்று!! நாறுகிறது, நாட்டிலே பல பகுதிகளில்; நாக்கு மட்டும் நீளுகிறது, நம்மைவிட்டால் வேறு நாதி இல்லை இந்த மக்களுக்கு என்ற போக்கில்.

ஒன்றன்பின் ஒன்றாக இத்தனை ஊழல்கள் வெளிவருகின்றன என்பதைக் காட்ட மட்டும் அல்ல, தம்பி! மக்களிடம் எவர் எவர்களைப்பற்றி இந்திரன் என்றும் சந்திரன் என்றும், காங்கிரஸ் தலைவர்களால் புகழ்பாடி வைக்கப்படுகிறதோ அவர்களெல்லாம், என்ன கதியாகிறார்கள், அவர்களைப் பற்றிய முழு உண்மை ஆராய்ந்து அறியப்படும்போது என்னென்ன விஷயங்கள் வெட்டவெளிச்சமாகின்றன, அவைகள் எத்துணை மோசமானவைகளாக இருக்கின்றன என்பதையும் விளக்கிடத்தான் கூறுகிறேன். மாசிலாமணிகள் நாங்கள் என்று மார்தட்டிப் பேசுகிறார்களே, காங்கிரஸ் ஆட்சியாளர்கள்பற்றி; இந்த மணிகள் எத்தனைமோசம் என்பது விளக்கப்பட்டுக்கொண்டு வருகிறது.

எதிர்க்கட்சிகளே வேண்டாம் என்று பேசுகிறாரே காமராஜர், சிலரை அழைத்துக்கொண்டும், சிலரை இழுத்துக்கொண்டும், சிலரை ஒழித்துவிடத் திட்டமிட்டுக்கொண்டும் வருகிறாரே, காரணம் புரிகிறதா?

> எதிர்க்கட்சிகள் மும்முரமாகப் பணியாற்றி வந்தால் காங்கிரசிலுள்ள கெய்ரான்கள், சுகாடியாக்கள், சங்கர்கள் ஆகியோர் பற்றி எவரேனும் எப்போதேனும் ஏதேனும் விஷயத்தை அம்பலப்படுத்திவிடுவார்கள்; பொதுமக்கள் ஆத்திரம்கொள்வார்கள்; பொதுத்தேர்தலில் விரட்டி அடிப்பார்கள் என்ற கிலி.

தம்பி! பீகாரில் இதுபோலவே புகார்! மைசூரில், நிஜலிங்கப்பாமீது குற்றச்சாட்டு. இந்த நிலையில் காங்கிரசாட்சி இருக்கும்போது, கண்டபடி பேசிக்கொண்டிருப்பதும், எதிர்க்கட்சிகளைக் கேவலமாக ஏசுவதும், சரியா, முறையா? என்பதை நடுநிலையாளர் எண்ணிப்பார்த்திடவேண்டும். பொதுமக்களிடம் இத்தனை பெரிய அளவிலும், இவ்வளவு நெருக்கமான முறையிலும் திராவிட முன்னேற்றக்கழகம் நேசத்தொடர்பு வைத்துக்கொண்டிருப்பதன் காரணமாக, இங்கு ஆளவந்தார்கள் வெகு விழிப்புடன் இருக்கவேண்டிவருகிறது. துளி சந்தேகம் எழுந்தாலும், விடமாட்டார்கள் கழகத்தார்! ஒரு நடவடிக்கையிலேனும் அழுக்குத் தெரியுமானால் அம்பலப்

படுத்திவிடுவார்கள்! மிக விழிப்பாக இருக்கவேண்டும்; அப்பழுக்கற்ற முறையில் நடந்தாகவேண்டும்; இல்லையென்ருல் துளைத்தெடுத்து விடுவார்கள் என்ற அச்ச உணர்ச்சி, இங்குள்ள காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு நிரம்ப இருக்கிறது. இதனை நான் கூறுவதற்குக் காரணம், நமக்கு நாமே பெருமிதம் காட்டிக்கொள்ளவேண்டும் என்பதற்காக அல்ல. ஜனநாயகத்தில்; ஒரு ஆட்சி நேர்மையாக இருக்கவேண்டுமானல், ஆட்சியில் உள்ளவர்கள், நாம் எதைச் செய்தால் எதிர்க்கட்சியினர் எந்தவிதமாக நம்மை எதிர்த்துத் தொலைத்துவிட முனைவார்களோ என்ற அச்சம்கொண்டநிலையில் இருந்தாக வேண்டும். அந்த நிலையற்றுப்போகுமானல் பிறகு ஆளவந்தார்கள் சொல்வதெல்லாம் சட்டம்தான், காட்டுவதெல்லாம் வழிதான்! மாற, மீற மக்கள் முயன்ருலும் முடியாது. எனவே தம்பி! ஜனநாயகம் வெற்றிபெற, விழிப்புடனும் விறுவிறுப்புடனும் பணியாற்றத்தக்க அளவும் ஆற்றலும், நிலையும் பெற்ற ஒரு எதிர்க்கட்சி இருந்தாகவேண்டும். அந்தநிலை, திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றிருக்கிறது, ஓங்கிவளர்ந்ததெல்லாம் ஒடிந்து வீழ்ந்துவிட்டன; ஓங்காரக் கூச்சலிட்டதுகள், ஒய்யாரக் கொண்டைக்குப் பூவுமுண்டு, ஒயிலாளின் காலுக்குத் தண்டை உண்டு என்று பாடிக்கொண்டு பாங்கிவேலை பார்க்கச் சென்றுவிட்டன, களத்தில் நிற்பவர் நாம்— கடுங்கோபம் காமராஜருக்கு வருவதற்குக் காரணம் அதுவே.

பெரிய இடத்திலே மட்டுமின்றி, எல்லா மட்டங்களிலும் இலஞ்ச இலாவணம்—ஊழல்—நெளிகிறது என்ற பேச்சு எழுந்தபோது கோபம் கொப்பளித்தது காங்கிரசின் கர்த்தாக்களுக்கு. மறுத்தனர், மிரட்டினர் மழுப்பினர், இறுதியாக ஏதேனும் ஒரு நடவடிக்கை எடுத்தாலொழிய, பொதுமக்கள் மனதிலே மூண்டுவிட்டுள்ள அருவருப்பை நீக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தனர். இந்தச் சமயத்தில், வேருேர் காலமாக இருப்பின் முனிபுங்கவர் ஆகியிருப்பார் என்று பலர் கருதத்தக்க முறையிலே பேசியும் உபதேசம் செய்துகொண்டும் உள்ள உள்துறை அமைச்சர் நந்தா புறப்பட்டார். இந்தியா முழுவதும் உள்ள போலீஸ் படை அவருடைய கட்டளைக்குக் காத்துக் கிடக்கிறது. பரவலாக நாடெங்கும் அமைந்துள்ள காங்கிரஸ் கமிட்டிகள் உள்ளன. ஜெயப்பிரகாஸ் நாராயணன் இருக்கிருர், கட்சிகள் வேண்டாம் கிராம அரசுகள் போதும் என்று கூறிக்கொண்டு; அவருடைய ஆதரவாளர்கள் அணியும் ஒன்று இருக்கிறது. விளுேபா இருக்கிருர், அவருடைய சர்வோதய இயக்கம் இருக்கிறது. இத்தனை அமைப்புகளும் நந்தாவுக்குப் போதுமானதாக, ஆற்றல் கொண்டவையாகத் தோன்றவில்லை; என்ன காரணத்தினலோ இந்த அமைப்புகள், இலஞ்ச ஒழிப்பு வேலையைச் செய்திட முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்படவில்லை. அத்தகைய நம்பிக்கையே இல்லாமல் அவர் எதற்காக போலீஸ் படையை நடாத்திச் செல்லும் பொறுப்பில் இருக்கிருர் என்பதும் புரியவில்லை. ஒளிமிகு மின்சார விளக்கு கைவசம் இருக்க, அதைக் கொண்டு செல்லாமல் மின்மினிகளைப் பிடித்து கரத்தில் வைத்துக்கொண்டு அவை விட்டு விட்டுச் சிந்தும் ஒளியின் துணைகொண்டு இருட்டறையில் கருப்புப் பணத்தைத் தேடுகிருர்- கனம். நந்தா!!

இதற்காக அவர் சாதுக்களைக் கூட்டிவைத்துப் பேசினுர்.

சதாசர் சமிதி என்ருேர் அமைப்பை நிருவி, குற்றம் குறைகூற விரும்புவோர், வருக! என்று அழைத்தார்.

இரண்டே ஆண்டுகளில் இலஞ்சப் பேயை விரட்டுவேன், இல்லையேல் நான் பதவியை விட்டு விலகிப் போவேன் என்று நந்தா சபதம் எடுத்துக்கொண்டார். ஆகவே, இரண்டு ஆண்டுகளுக்குள் இலஞ்சத்தை ஒழித்ததாகக் காட்டியாக வேண்டும். ஒரு புதிய அமைப்பு மூலம் இந்தக் காரியத்தைச்செய்யத் தொடங்கினல், அந்த அமைப்பும் அவருடைய ஆதீனத்துக்குக் கட்டுப்பட்டதாக இருந்தால், இரண்டாம்ஆண்டு முடிகிற நேரமாகப் பார்த்து,

> இலஞ்சம் வெகுவாகக்குறைந்துவிட்டது. கொடுப்பவர்களுக்கும் குலைநடுக்கம் கண்டு விட்டது; வாங்குபவர்களுக்கும் கிலிபிடித்து விட்டது.
>
> எடுத்த சபதத்தை நந்தா நிறைவேற்றி விட்டார்! இலஞ்சப் பேய் ஒழிந்துவிட்டது.

என்பதாக நாட்டுக்கு அறிவித்துவிட வழி இருக்கிறது. இதற்காகவே நந்தா திட்டமிட்டு இவ்விதம் செய்தார் என்று நான் கூறவில்லை. இவ்விதம் எண்ண இடமளிக்கிறது அவருடைய வேலை முறை என்று கூறுகிறேன்.

வங்கக் காங்கிரஸ் தலைவர் அட்டுல்யாகோஷுக்கு இது கட்டோடு பிடிக்கவில்லை.

வேறு பல காங்கிரஸ்காரர்களுக்கும் இது பிடிக்கவில்லை.

வெளிப்படையாகவே இவர்கள் பேசினர்; வெகுண்டெழுந்தார் நந்தா; சமிதியைக் குறைகூறுகிறவர்களைக் கண்டிக்கலானுர். வங்கத் தலைவர் வாளாயிருக்கவில்லை, காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில், இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்கிருர். நந்தா கூறுகிருர், நாளுக இந்த சமிதியை ஆரம்பிக்கவில்லை காங்கிரஸ் தலைவர் காமராஜரின் சம்மதம் பெற்றுத்தான் ஆரம்பித்தேன் என்று.

காமராஜரோ, சமிதி பற்றி எதுவுமே பேசத்தேவை இல்லை, செயற்குழுவில் என்று கூறிவிட்டார்.

சதாசர் சமிதி அல்லது குழு, இலஞ்சப் பிரச்சினையை, மிக எளிதாக, மிக விரைவாக, கடினமான எந்த முறைகளுமின்றியே தீர்த்துவிட முடியும் என்று நம்பிடும் பரிதாபத்தை ‘இந்து’ பத்திரிகை எடுத்துக் காட்டியிருக்கிறது.

நாற்பத்தி ஐந்தே நாட்களில் ‘சதாசர்’ தன்னிடம் கொடுக்கப்பட்ட புகார்களை, தொகுத்து, தரம் பிரித்து, பரிசீலித்து, முடிவுகள் எடுத்து, கருத்தையும் கூறிவிட்டது! அந்தக் கருத்து என்னவென்ருல்,புகார்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டு வருகிறது; புகார்களில் பெரும்பாலானவை ஆதாரமற்றவை; என்பதாகும். இதன்படிப் பார்த்தால், இலஞ்சம் தாண்டவமாடுவதாகச் சொல்வது தவறு என்று ஏற்படும்.

‘இந்து’ இதழ் இந்த முறையையும் விரும்பவில்லை, இந்த முடிவையும் ஏற்றுக்கொள்ளவில்லை. பொறுத்தமான காரணங்களையும் ‘இந்து’ காட்டியிருக்கிறது.

சர்க்காரால் அமைக்கப்பட்ட சந்தானம் கமிட்டி, முறைப்படி ஆராய்ந்து பார்த்து, நிர்வாகத் துறையில்

மேல் மட்டத்திலிருந்து அடி மட்டங்கள் வரையில், இலஞ்ச ஊழல் இருக்கிறது என்று கூறி இருக்கிறது.

மத்திய சர்க்கார் அமைத்த தனி போலீஸ் பிரிவு 1963-ம் ஆண்டு 4857 புகார்களைப் பெற்றுப் பரிசீலிக்க வேண்டி வந்தது. 1957-ல் 2733 புகார்கள்! 1963-ல் 4857 என்று வளர்ந்து காட்டுகிறது.

புகார்களில் அற்பமானவை ஆதாரமற்றவை என்று தள்ளிவிடத் தக்கவைகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டது.

இந்தக் காரணங்களைக் காட்டி 'இந்து' நந்தாவின் கைவிளக்கு பயனில்லை என்பதை விளக்குகிறது.

எத்தனை சமாதானம் கூறினாலும், காங்கிரஸ் ஆட்சியில் ஊழலும் இலஞ்சமும் வளர்ந்துவிட்டிருக்கிறது என்பதை மறைக்க முடியாது—மறுக்க முடியாது—பெரியவர்கள் மழுப்பிக் கொண்டிருக்கலாம்.

நிர்வாகத்திலே நெளியும் ஊழலும் இலஞ்சமும் இந்த விதம் இருக்கிறது—கருப்பஞ்சாறு பருகாதே போதை ஏறும், நிலை தடுமாறும் என்று 'காச்சினது' குடித்துவிட்டுப் பேசுவது என்பார்களே அதுபோல, இத்தனை ஊழலை வைத்துக்கொண்டே பெரிய தலைவர்கள் பேசுகிறார்கள், நாட்டை ஆளும் யோக்யதை எமக்கன்றி வேறு எவருக்கும் இல்லை என்று.

இலஞ்ச ஊழலை ஒழிக்க வேண்டுமல்லவா? துணிந்து நான் கூறுவதைச் செய்வீர்களா?

முதலில், காங்கிரசின் மேல் மட்டத்தைத் துப்புரவாக்குங்கள். முடியுமா? துணிந்து செய்வீர்களா?

நன்கொடை, இனும் என்ற எந்தப் பெயராலும் தொழிலதிபர்கள், வணிகர்கள், முதலாளிகள், தொழிற்சாலை நடத்துபவர், சர்க்கரை வியாபாரிகள், டாட்டாக்கள், பிர்லாக்கள், சிங்கேனியாக்கள் போன்றாரிடம் தேர்தல் நிதி வசூலிக்கமாட்டோம் என்று ஆளுங்கட்சி திட்டவட்டமாக அறிவித்துவிட வேண்டும்.

இப்படிப்பட்டவர்களிடம் இருந்து வாங்கப்படும் பணம் பிரம்மாண்டமான அளவுள்ளது.

இந்தப் பணம் அமைச்சர்களையும் காங்கிரஸ் அரசியல்வாதிகளையும் 'குஷி' படுத்தவும், வியாபார சம்பந்தமாக எந்தவித குறுக்கீடுகள் செய்யாமல் இருப்பதற்காகவும் தரப்படுகிறது.

இந்தப் பணம், தாங்களே மனமுவந்து. தர்ம நியாயத்துக்காகவோ, தேச பக்தி காரணமாகவோ தரப்படுகிறது என்று ஒருவரும் நம்புவதில்லை.

இந்தப் பணம் ஒருவிதமான இலஞ்சம்தான்.

பர்மிட், லைசென்சு, கோட்டா பெறுவதற்காகத் தரப்படுகிறது.

ஆளுங்கட்சி துணிந்து தன்மீது உள்ள இந்தக் கறையைத் துடைத்துக்கொள்ளட்டும். பிறகு நாட்டிலே ஒரு பரிசுத்தம் ஏற்படும்.

நன்கொடை திரட்டுவதை நிறுத்துவதோடு, காங்கிரஸ் தலைவர்களுக்கு, ஆயிரக்கணக்கில், இலட்சக் கணக்கான ரூபாய் நோட்டுகளை மாலையாகக் கட்டிப் போடுகிறார்களே அதை நிறுத்திவிட வேண்டும்.

இப்படி 'நோட்டு மாலை' போடுபவர்கள், பஸ் முதலாளிகள், அல்லது மற்ற முதலாளிகள். எதற்காகப் போடுகிறார்கள்? இந்த பொதுஜனத் தலைவர்களிடம் கொண்ட அன்பினால் அல்ல! ஏற்கனவே பெற்ற சலுகைக்காக அல்லது இனிச்சலுகை பெறவேண்டும் என்பதற்காகப் போடுறார்கள்.

க்ஷேமநல சர்க்காரில், மந்திரிகளிடம், சலுகைகள் காட்டுவதற்கான அதிகாரம் மிகப் பெரிய அளவில் இருக்கிறது. இலஞ்ச ஊழலுக்கு ஆணிவேர் இதிலேதான் இருக்கிறது.

வணிகர்களுக்கு, தொழிலதிபர்களுக்கு, ஏற்றுமதியாளர் இறக்குமதியாளர்களுக்குத் தேவைப்படும் லைசென்சு, பெர்மிட், கோட்டா ஆகியவைகள் வழங்கும் அதிகாரத்தை மந்திரிகளிடமிருந்து எடுத்துவிடவேண்டும். அந்த அதிகாரத்தை அரசியல் கட்சிகளைச் சேராத, சுயேச்சையாக உள்ளவர்கள், தொழில் நிபுணர்கள் ஆகியோர் கொண்ட ஒரு குழுவிடம் ஒப்படைத்துவிட வேண்டும். அத்தகைய குழுவில் எந்த மந்திரியும் உறுப்பினராக இருக்கக்கூடாது.

விற்பனையாளர்களுக்கு

மணியார்டர், செக், டிராப்ட், கடிதங்கள் அனுப்பும்போது உரிமையாளர் "காஞ்சி" அலுவலகம் சின்ன காஞ்சிபுரம் என்று குறிப்பிட்டு எழுதவும்.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

அமைச்சர்களும் அதிகாரிகளும், இலஞ்ச ஊழலில் ஈடுபட்டிருப்பவர்கள், சமூக விரோதிகளாகிய கெட்ட பெயரெடுத்தவர்களுடன் குலவக்கூடாது, அவர்கள் நடத்தும் விருந்துகளில் கலந்துகொள்ளக்கூடாது.

காண்ட்ராக்டர்கள், பெரிய வியாபாரிகள், பெரும் பணம் படைத்தவர்கள், பெரிய மோட்டார்கள் உடையவர்கள் இவர்கள் நடத்தும் பானவிருந்து விழாக்கள் விருந்துகள் ஆகியவற்றில் கலந்துகொள்ளாமல் தம்மைத் தாமே தடுத்துக்கொள்வது கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனுல் அப்படிப்பட்டவர்கள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளாமல், பகீஷ்கரிப்பது சமூகத்தில் ஒரு ஆரோக்கியமான சூழ்நிலையை ஏற்படு'த்தி வைக்கும்.

சர்க்கார் மாளிகை விழாக்களில் இப்போது நடப்பதுபோல கண்டவர்களை அழைக்கக்கூடாது; இப்படிப்பட்டவர்களை அத்தகைய விழாக்களுக்கு அழைக்கக்கூடாது.

என்ன அண்ணு இது! ஒரே அடியாகக் காங்கிரஸ் மந்திரிகளை எந்த அதிகாரம் அவர்களுக்கு ஜொலிப்பையும்—மிதமிஞ்சிய மதிப்பையும் தருகிறதோ அதை விட்டு விடச் சொல்லுகிருயே! எந்த முதலாளிகளின் நன்கொடைகொண்டு தேர்தலில் வெற்றிபெறுகிருர்களோ அந்தப் பணத்துக்கும் உலைவைக்கிருயே! இது நடக்கக் கூடிய காரியமா? உன் பேச்சைக் கேட்பார்களா? என்றுதானே தம்பி! கேட்கிருய். தம்பி! அவ்வளவு பெரியவர்கள் இப்படி இப்படி நடந்தாகவேண்டும் என்று என்ஞல் சொல்லமுடியுமா! ஏழை சொல் அம்பலம் ஏறுமா!! எனக்கும் புரிகிறது உனக்கும் தெரிகிறது, காங்கிரஸ் அரசியல்—தேர்தல் காரியம்—எப்படி நடத்தப்பட்டுவருகிறது என்று. ஆனுல் முதலாளிகளிடம் பணம் வாங்காதே! பெர்மிட் கோட்டா லைசென்சு வழங்கும் அதிகாரத்தை விட்டுவிடு! என்று சொன்னுல், கேட்பார்களா!! நான் அல்ல தம்பி! இத்தகைய யோசனைகளைத் துணிந்து கூறியது. இந்தியாவின் பிரதம நீதிபதியாக இருந்தவர், மேகர்சந்த்மகஜான் என்பவர் கூறியுள்ளது அது. நேர்மை உணர்ச்சியுடன் அஞ்சாமையும் இணைந்திருப்பவர்கள் மட்டுமே, ஆளவந்தார்கள் புருவத்தை நெறித்து, முணுமுணுத்து, பழிவாங்கத் திட்டமிடக்கூடும் என்று தெரிந்திருந்தும், உண்மையை உரைத்திடுவோம், ஊராள்வோர் கோபித்தால் கோபித்துக்கொண்டு போகட்டும், ஊரார் உண்மை நிலைமையை உணர்ந்தால் போதும் என்ற எண்ணம் கொண்டவர்கள் மட்டுமே இதுபோலப் பேசமுடியும்.

இலஞ்ச ஊழலுக்கு மூலகாரணமே உங்களிடம் இருக்கிறது. உங்களுக்கும் முதலாளிகளுக்கும் உள்ள கொடுக்கல்—வாங்கலே, எல்லாவித ஊழலையும் உற்பத்தி செய்கிறது.

"காஞ்சி"
சந்தாவிகிதம்

ஆண்டு சந்தா ரூ. 10—00
ஆறுமாத சந்தா ரூ. 5—00

ஆறுமாத சந்தாவிற்குக் குறைந்து அனுப்புவதற்கில்லை.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

இவ்விதம் துணிந்து, உண்மையைச் சொன்னவர், மகஜான்.

நம் அனைவருக்கும் தெரிந்ததைத்தான் அவர் சொல்லியிருக்கிருர்; ஆனுல் நாம் சொல்லும்போது கட்சிமாச்சரியத்தால் பேசுகிருேம் என்று பொது மக்கள் எண்ணிக்கொள்ளக்கூடும்; அல்லது பொதுமக்களிடம் ஆளவந்தார்கள் அதுபோலச் சொல்லிவிடக் கூடும்.

மகஜான் ஒரு கட்சிக்காரர் அல்ல, அரசியல்வாதி அல்ல; காங்கிரஸ் அமைச்சர்கள்பற்றி கண்டித்துப் பேசி, அதன்மூலம் 'பெயர்' பெற்று, ஓட்டுவேட்டை ஆட நினைக்கிறவர் அல்ல. நாடு சீர்பட, நிர்வாகம் தூய்மைப்பட, என்ன செய்தாகவேண்டும் என்பது பற்றி ஆர அமர எண்ணிப்பார்த்து, விருப்பு வெறுப்பு அற்ற நிலையில் இருந்து பிரச்சினையை அலசிப்பார்த்து, இதனைக் கூறுகிருர். பொறுப்புமிக்க இடத்தில் இருந்தவர், பொச்சரிப்புகொண்ட பதவி தேடி அல்ல.

ஒரு ஆளுங்கட்சி, எதிர்க் கட்சிகளிடமிருந்து 'இடித்துரை' கேட்பது சகஜம்; ஆனுல் பிரதம நீதிபதி எனும் மிக உன்னதமான நிலையில் இருந்தவர்—மனம் நொந்து—ஆளுங்கட்சிக்கு துணிந்து புத்திமதி கூறுவது என்ருல், உள்ளபடி அது வியந்து கவனிக்கத் தக்கதாகும்.

எல்லை கடந்துவிட்டது, இனி நமக்கென்ன என்று நம்போன்றவர்கள் இருந்துவிடக்கூடாது, மக்களுக்கு உண்மை நிலைமையை உணர்த்தியாகவேண்டும் என்ற அக்கரையுடன் அவர் ஆளுங்கட்சியை இத்தனை பச்சையாகக் கண்டித்துள்ளார்.

டாட்டாக்கள், பிர்லாக்கள், சிங்கேணியாக்கள்,

போன்ருரிடம் பணம் பெறுவது ஒருவிதத்தில் இலஞ்சமே! என்று கூறியிருக்கிருர்.

எதிர்க்கட்சிகள், காங்கிரசுக்கும் முதலாளிகளுக்கும் உள்ள 'பந்தபாசத்தை' எடுத்துக்காட்டிடும்போது, கவனிக்க மறுத்திடும் போக்கினர்கூட, எந்தவிதமான அரசியல், கட்சி நோக்குமற்ற முன்னுள் பிரதம நீதிபதி, நொந்த மனதுடன், துணிந்து, காங்கிரஸ் கட்சித் தலைவர்களின் போக்கை அம்பலப்படுத்தி, அந்தப்போக்கை போக்கிக்கொள்ளாமல், சமிதிவைத்து இலஞ்சப் பேயை ஒழிப்பேன் என்று நந்தா கூறுவது வெறும் கேலிக்கூத்தாகிப்போகும் என்று கூறியுள்ளதை அலட்சியப்படுத்தமாட்டார்கள் என்று எண்ணுகிறேன். தம்பி! அவர் எடுத்துரைத்தவைகளை பொதுமக்கள் அறியும்படிச் செய்திடவேண்டிய பொறுப்பு உன்னுடையது. உன்னுல் முடியும்.

தேர்தலில் வெற்றிபெற பெரும் பணத்தை முதலாளிகளிடம் பெற்றுக்கொண்டால், பணம்கொடுத்த முதலாளிகள், ஒன்றுக்குப் பத்தாக, கொள்ளை இலாபமடித்திடாமல் வேறு என்ன செய்வார்கள்! கொள்ளை இலாபம்பெற, குறுக்குவழி சென்ருகவேண்டிவருகிறது. குறுக்குவழி செல்லும்போது, சட்டம் குறுக்கிட்டாலும் அதிகாரிகள் தடுத்திட்டாலும், காங்கிரஸ் அமைச்சர்களின் நண்பர்கள் என்ற 'கவசம்' இவர்களுக்கு எந்தவிதமான தொல்லையும் ஆபத்தும் வரவிடாமல் பாதுகாப்பு அளிக்கிறது. இலஞ்சமும் ஊழலும் வளராமலிருக்க முடியுமா?

பிரதம நீதிபதியாக இருந்தவரே காங்கிரஸ் ஆட்சியினரின் குட்டுகளை இவ்வளவு வெட்ட வெளிச்சமாக்குகிருர், ஆனுல் காங்கிரஸ் தலைவர்களோ முடுக்குடன் பேசுகிருர்கள், எம்மைக் குறைகூற என்ன இருக்கிறது? எவருக்கு இருக்கிறது அந்தத் தகுதி? என்று. தகுதி மிக்கவரும், வேதனை தாளாமல், மனதிலுள்ளதைக் கொட்டிவிட்டார். இனியேனும் காங்கிரஸ் தலைவர்கள் சிறிதளவு அடக்க உணர்ச்சி காட்டுவார்களா?

இவர் ஒருசமயம் காங்கிரசுக்குப் பகைவரோ, பிடிக்காதோ காங்கிரஸ் தலைவர்களை என்றும் எவரும் எண்ணத் தேவையில்லை, தம்பி! அவருடைய கட்டுரையில் துவக்கத்திலேயே, நேருபண்டிதரையும் இன்றைய காங்கிரஸ் தலைவர் காமராஜரையும் பாராட்டியிருக்கிருர்.

ஆகவே அவருடைய பலத்த கண்டனத்துக்குக் காரணம், வெறுப்பு அல்ல, பொச்சரிப்பு அல்ல, கட்சி மாச்சரியம் அல்ல, பதவி பிடிக்கும் நோக்கம் அல்ல, உள்ளத்தில் தோன்றியதை அச்சம் தயை தாட்சணியமின்றிக் கூறியிருக்கிருர்.

என்னென்ன இன்னலை ஏற்றுக்கொள்கிருர்கள் இந்தத் தூயவர்கள் என்று நாட்டின் நல்லவர்கள், காங்கிரசாரைப் பாராட்டிய காலத்தோடு,

என்னென்ன ஊழல் இவர்கள் ஆட்சியில், பதவி பெற என்னென்ன தந்திரம் செய்கிருர்கள், எவரெவரிடமிருந்து எத்தனை எத்தனைப் பணம் பெறுகிருர்கள், பெற்ற பணத்துக்காக என்னென்ன சலுகைகளைக் காட்டுகிருர்கள் முதலாளிகளுக்கு, சலுகைகளைப் பெற்றுக்கொண்டு அந்த முதலாளிகள் என்னென்ன விதமான முந்திரா வேலைகளைச் செய்கிருர்கள், ஊழலை வளரச் செய்துவிட்டு, சொந்த நலனைப் பெருக்கிக் கொண்டு சொகுசாக வாழ்கிருர்களே, இந்தக் காங்கிரஸ்காரர்கள் என்று பரவலாக எங்கும் பேசப்படும் இந்தக் காலத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சே! நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாமா என்று தோன்றும் நல்ல காங்கிரஸ்காரர் அனைவருக்கும். ஆனுல் தம்பி! அவர்கள், நாட்டுக்கு உண்மையை எடுத்துச் சொல்லும் நம்முடைய நாவினை அல்லவா வெட்டிவிடத் திட்டமிடுகிருர்கள்.

எனக்கு ஒரு மகிழ்ச்சி தம்பி! காங்கிரசார் கையாளும் கேடான முறைகளை, அரசியல் வாதிகள் கண்டிப்பதுடன் முடிந்துவிடவில்லை, அரசியலுக்கு அப்பாற்பட்ட அறிவாளரும் கண்டிக்க முன்வந்து விட்டார்கள்; அவர்கள் பேச்சு, மக்களிடையே தெளிவை நிச்சயம் உண்டாக்கும்.

நாம் இதுகாறும் கூறிக்கொண்டு வந்தவைகளை, நாட்டிலே மிகத் தூய்மையான துறையில் மிகப்பெரிய நிலையிலே இருந்து வந்தவரும் கூறுகிருர்; நம்மைவிட திட்டவட்டமாக என்பதைக் காணும்போது, நாம் நடாத்தி வரும் பணி நியாயமானது, தேவையானது தூய்மையானது என்பதிலே மேலும் நம்பிக்கை வளரத்தான் செய்கிறது. எனவே நமது பணி தொடர்ந்து நடைபெற ஆர்வம் அதிகமாகிறது.

காந்திமகான் சீடர் இவர் கனதனவான்
களுடன் கூடி, நாடு ஆளும் ஆசையினுல்
நச்சரவை வளர்க்கின்ருர், அரவு அது தீண்டு
வதால் துடிக்கின்ருர் ஏழையரும், துயர்
துடைத்து தூய்மைகாண தொடர்ந்து நடத்
திடுவோம் நமது பணி

என்று கூறிடத் தோன்றுகிறது. உனக்கு என்ன தோன்றுகிறது, தம்பி!

அண்ணன்,



2-ம் பக்கத் தொடர்ச்சி

சொந்த அனுபவம் இல்லாதது ஒரு குறைதான் என்றாலும் ஏமு! படித்திருப்பாளேல்லோ, மனோன் மணி, குடும்பக் கட்டுப்பாடு பற்றி; டாக்டராச்சே, அதனாலே வந்து பேசட்டும் என்று அழைக்கிறா.

ஏட்டுச் சுரைக்காய்தானே! கிடக்கட்டும். பொன்னி! நீ என்ன சொல்றே, குடும்பக் கட்டுப்பாடு பற்றி. குடும்பக் கட்டுப்பாடு என்பது குழந்தை குட்டிகளை அதிகமாகப் பெற்றுக் கொள்ளக்கூடாது என்று பேசுகிறார்களே, அதுதானே...

ஆமாம் ஏமு! ஆனா ஏன் உனக்கு வெறுப்பா இருக்கு?

என் விருப்பத்தையும் வெறுப்பையும் விட்டுத் தள்ளு. நீ, அது நியாயம்னு சொல்றயா...

நியாயந்தான். கண்ணை மூடிக் கொண்டு டஜன் கணக்கிலே குழந்தைகளைப் பெற்றுவிட்டுப் பிறகு,...

இருடி இரு; பட்டு! இந்த ஒரு விஷயத்திலே நீ கொஞ்சம் ஒதுங்கிக் கொள்ளவேணும். ஆமாம். என்னடி தெரியும் உனக்கு அதைப்பற்றி நீ இன்னமும் கன்னிப் பெண்தானே. பொன்னி பேசட்டும், கேட்கிறேன்.

ஏமு! சூடு அதிகமாகவே இருக்குதே.

குடும்பத்தைக் கட்டுப்படுத்தப் போறாளாம், குடும்பத்தை. அதிகமாகக் குழந்தைகளைப் பெறக் கூடாதாம். அதற்குக் கூடவாடிம்மா, சர்க்கார் சட்டம் போடணும்...

சட்டம் யார் போட்டதாச் சொன்னது உனக்கு? யோசனை சொல்லிண்டிருக்கா...

நீ இரு பட்டு! நான் பேசிக் கொள்றேன் ஏமுவோடே! ஆமாம் ஏமு! ஒரு குடும்பத்திலே எட்டும் ஒன்பதுமா குழந்தைகள் பிறந்தா. அந்தக் குடும்பத்துக்குக் கஷ்டம்தானே.

அதைத்தான் கேட்கறேன், என்ன கஷ்டம்னு? எப்படிப்பட்ட கிராதகனா இருந்தாலும், கல்மனசுக்காரியாக இருந்தாலும், பெத்தெடுத்த குழந்தைகளுக்கு, கூலிவேலை செய்தாவது, நாலு வீடு பிச்சை எடுத்தாவது, சோறுபோட்டு வளர்க்காமலா விட்டு விடுவாங்க, அப்படி இருக்கும்போது, அதிகமாகக் குழந்தைகளைப் பெறக் கூடாதுன்னு எதுக்காகச் சொல்லணும்; சொல்லு.

ஒரு வீடாகட்டும் நாடாகட்டும் ஏமு! ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தான் எதையும் தாங்க முடியும். அதிகக் குழந்தைகளைப் பெறுவதாலே, குடும்பம் கிடைக்கிற வருமானத்தை வைத்துக் கொண்டு, குழந்தைகளைச் சீராட்டிப் பாராட்டி வளர்க்க முடியறதில்லை. ஆசை இருக்கலாம். தாய் அன்பு, பாசம் இதெல்லாம் உண்மையான உணர்ச்சி. நான் மறுக்கவே இல்லை. ஆனா அன்பாகக் குழந்தைகளை வளர்க்கப் போதுமான வசதி வேணுமே, பணம் வேணுமே. ஒவ்வொரு குழந்தை பிறக்கறபோதும், அந்தக்குழந்தைக்காக ஏற்படும் புதுச் செலவுக்குத் தக்கபடியாகவா, குடும்ப வருமானம் உயருது? வேலையிலே இருக்கிறவங்களுக்கு—ஒரே குழந்தைக்காரனுக்கு நூறு ரூபா சம்பளம், ஒன்பது குழந்தைக்காரனுக்கு மூணுநூறுன்னு ஏதாவது ஏற்பாடு இருக்குதா?

அதாவது, நம்ம நாட்டோட தரித்திரம் அப்படிப்பட்டது என்று சொல்கிறே. இப்ப இருப்பதைவிட அதிகமாக ஜனங்கள் ஆகிவிட்டா அவர்களைக் காப்பாத்த, வக்கு இல்லை சர்க்காருக்கு என்று சொல்கிறே. அப்படித்தானே.

அப்படி என்றேதான் வைத்துக் கொள்ளேன். சர்க்கார்னா என்ன ஜால வேடிக்கை, ஸ்தாபனமா! சர்க்காரும், நாட்டிலே கிடைக்கக் கூடியதைத் திரட்டி வைத்துக் கொண்டு நாட்டிலே உள்ளவர்களுக்கு வசதிகளைச்செய்துகொடுக்க ஏற்பட்டிருக்கிற ஒரு அமைப்புதானே. அது என்ன செய்யும்? அதனிடம் கிடைக்கக்கூடிய வசதியை விட பல மடங்கு அதிகமான அளவிலே ஜனத்தொகை பெருகி விட்டா...

என்னமோ பொன்னி! எனக்கு இது நியாயம்னு படாது...

நல்ல வேளை நியாயம்னு படாதுன்னு சொன்னே ஏமு! நியாயமில்லைன்னு சொல்லாமல். பொருளாதாரச் சிக்கல் ஏற்படுவது மட்டுமில்லை; ஒரு பெண்ணோடை உடம்பும் பாழாகிப்போகும், அதிகக் குழந்தைகளைப் பெற்றுவிட்டா. பெண் மட்டுமில்லை, குழந்தைகளே கூட, அதிகமாக அதிகமாக நாறும் நரம்புமாகிப் போகும்...அதனாலேதான், குடும்பக் கட்டுப்பாடு வேண்டும்...

பதினாறும் பெத்து பெருவாழ்வு வாழணும்னு பெரியவர்கள் ஆசீர்வாதம் செய்வா...முன்னாலே...

ஆமா ஏமு! ஆசீர்வாதம் செய்கிறவர்களுக்கு என்ன தொல்லை? பெறுகிறவளுக்கும், வளர்க்கிறவர்களுக்கும்தானே தெரியும் அதிலே இருக்கிற கஷ்டமெல்லாம்...

ஒரு குடும்பம்னு இருந்தா பூவும் பிஞ்சியும் காயும் பழமும், தளிரும் சருகும் இருப்பதுபோல, கலகலன்னு தழைச்சி இருக்கவேண்டும். பார்க்கப் பார்க்கச் சந்தோஷமா இருக்கும்.

பார்க்கச் சந்தோஷமா இருக்கும், ஏமு! அது உண்மை! பார்க்கத்தான் சந்தோஷம்; பராமரிக்க அல்ல! புரியுதா!!

பெத்ததை வளர்க்கமுடியாம தூக்கிக் கிணற்றிலே போட்டுவிடுவாளா! கழுத்தை நெறித்துகொன்று போட்டுவிடுவார்களா......

மனம் இடம்கொடுக்குமா! இலட்சத்திலே ஒருவர் அப்படிக்கூடச் செய்வதும் உண்டு.

நான், பார்த்தனே பேப்பர்லே! ஒரு குடும்பம் முழுவதுமே செத்திருக்குதே. வறுமைக் கொடுமையாலே குழந்தைகளையும் கொன்றுபோட்டுவிட்டு, புருஷன் மனைவி இரண்டு பேருமே தற்கொலை செய்து கொண்டு இறந்துபோனார்கள்...

ஏமு! பட்டு சொல்வது உண்மைதான். நான் கூடப் பார்த்தேன் பேப்பர்லே. நீ, இதை நம்பாதிருக்க மாட்டேன்னு எனக்குத் தெரியும். உனக்குத்தான் நல்லதங்கா கதை மனப்பாடமாச்சே!

ஆமாண்டிம்மா! ஆரம்பி உன்னோடை சொயமரியாதைப் பேச்சை. ஆனாஒண்ணு தெரிஞ்சிக்க. எனக்கு நல்லதங்கா கதை மட்டுமில்லா, குசேலர் கதையும் தெரியும். அவருக்கு 27-தழந்தைகள், தெரியுமா, 27- அவர் உன்னோடை குடும்பக் கட்டுப்பாடு, கர்ப்பத்தடை இவைகளையும் மதிக்கல்லே; பேப்பர்லே படித்தாளாமே பட்டு, அதுபோல, குழந்தைகளைக் கொண்ணுபோட்டுவிட்டு, தானும் தற்கொலைசெய்துகொள்ளவில்லை.

எனக்கு ஏமு! இந்த மாதிரி கதைகளிலே நம்பிக்கை கிடையாதே தவிற, அவைகளைப் படித்ததில்லைன்னு நினைத்துக்கொள்ளாதே.

எனக்கும் தெரியும் குசேலர் கதை; 27-பிள்ளைகளை வைத்துக்கொண்டு, குசேலர், பிச்சை எடுத்துக் காலந் தள்ளி வந்ததாகச் சொல்லப்படுகிற கதை.

பெத்தெடுத்ததுகளை எப்படியும் காப்பாத்தி ஆகணும் என்கிற கடமை அவருக்கு. பிச்சை எடுத்தாலும் கேவலம் இல்லை என்று செய்தார்.

ஐயோ! நான், அவர் பிச்சை எடுத்தது தவறு என்று சொல்ல வரவில்லையே. பிச்சை எடுக்கத் தேவையில்லையே அவருக்கு; எதுக்காகப் பிச்சை எடுத்தார்னுதான் கேட்கறேன்.

என்னடி புதிர்போடறே. குழந்தைகள் 27. பெரிய குடும்பம். என்ன செய்வார் பாவம்! தரித்திரம். அதனாலே, அத்தனைபெரிய குடும்பத்தை காப்பாத்த, பிச்சை எடுக்கவேண்டி வந்தது.

அதுதான் தேவை இல்லையே என்று நான் சொல்றேன். அவருக்கோ 27-பிள்ளைகள். வருஷா வருஷம் தவறாமல் ஒரு குழந்தை வீதம் பிறந்திருந்தால்கூட, கடைசீ குழந்தைக்கு ஒரு வருஷம் வயசாக இருக்கும்போது, 27-வயதிலே முதல் பிள்ளை, 26-வயதிலே இரண்டாவது, 25-லே மூன்ருவது, 24-வயதிலே நாலாவது, என்று இப்படி பிள்ளைகள் இருந்திருக்குமே, இதுகள்வேலை செய்து நாலுகாசு சம்பாதிக்கலாமல்லவா! உழைத்துப் பிழைப்பு நடத்தக் கூடிய வயதிலே இத்தனை பிள்ளைகள் இருக்கும்போது, ஏன் பாவம், இந்தக் குசேலர் பிச்சை எடுக்கப்போகவேண்டும்......

சிரிப்பும் வருது, கோபமும் வருது, பொன்னி! நீ இப்படிப் பேசுவதைக் கேட்டா...ஒருவிதத்திலே பார்த்தா நீ சொல்வது நியாயமாத்தான் இருக்குது. முதல் பையனுக்கு 27-வயது ஆயிருக்கணுமே, குசேலருக்கு 27-வது பிள்ளை பிறந்தபோது......

அதுமட்டுமில்லாம, ஏழு! குசேலருக்கு, கண்ணபிரானுடை கடாட்சம் கிடைத்ததாகக் கதை இருக்கு...... அதே பகவான்தானே இருந்தார், நல்லதங்கா. ஏழு குழந்தைகளையும் கிணற்றிலே தள்ளி சாகடித்துவிட்டு தானும் செத்தபோது...

அந்தக் கதையைக் கேட்டா கண்கள் குபுகுபுன்னுதான் ஆகிவிடுது...

இரு, இரு, நீ இப்ப, அந்த நல்லதங்காளை நினைத்துக்கொண்டு அழ ஆரம்பித்துவிடாதே.

போடி! ஏதோ காரணத்துக்காக, கதைகளைச் செய்தா. அவைகளை இப்ப எடுத்துக்கொண்டு, இதுக்கு என்ன காரணம்? அதுக்கென்ன அர்த்தம்னு கேட்டா, யாராலே சொல்லமுடியும்?

அப்ப ஒரு காரியம் செய்யச் சொல்லு ஏழு! இந்தக் கதைகளுக்கெல்லாம் காரணமும் கிடையாது, அர்த்தமும் கிடையாது; கேட்கப்படாதுன்னு சொல்லிவிடச்சொல்லு. இப்ப நாங்க ஏதாகிலும் புதுமையா ஒரு விஷயம் சொன்னா, எத்தனை காரணம் கேட்கறிங்க, என்னென்ன வாதாடுகிறிங்க; நம்பமுடியாதுன்னு பேசறிங்க......

பொன்னி! ஒருவிஷயம் நான் ஒத்துக்கொள்கிறேன். இந்தக் காலம் ஒரு அற்புதமான காலந்தாண்டி. அதிலே சந்தேகமே இல்லை. சந்திரமண்டலத்துக்கே போகமுடியும் என்கிருளே......

படம் எடுத்து, சந்திரமண்டலம் இப்படி இப்படி இருக்குது என்று தெரிவித்து விட்டாச்சே. அங்கே இருக்கிற மலைகள், ஆறுகள், சமுத்திரங்கள், எல்லாவற்றையும் இங்கே பூலோகத்திலே இருந்தபடியே ஆராய்ச்சியாலே விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிற விஷயம் பார்த்தயேல்லோ......

ஆமாம், பொன்னி! நான்கூட, முதலிலே, இது நடக்கிற காரியமான்னுதான் சொன்னேன். இப்ப போகிற போக்கைப் பார்த்தா, இன்னும் ஒரு பத்து இருபது வருஷத்திலே, சந்திரமண்டலத்துக்கு போய் வருவது சகஜமாகிவிடும் போல இருக்குது......

ஆமாம். பூலோகத்துக்கும் சந்திரலோகத்துக்கும் இடையிலே உள்ள தொலைவு கிட்டத்தட்ட இரண்டரை இலட்சம் மைலாம். சந்திரனிலே களங்கம் என்று சொல்லுகிருேமே, பால்போல் காய்கிற நிலாவிலே புகை படிந்ததுபோலச் சில பாகம் தெரிகிறதே, அவைகள் கடல்களாம்!

பாரேண்டி அதிசயத்தை; களங்கம் என்கிருேம் நாம்.

ஏன் மறைக்கணும் ஏழு! குரு பத்தினியைச் சந்திரன் கற்பழித்தான் அதனாலே கோபம்கொண்ட குரு, நீ தேய்ந்து தேய்ந்து, பிறகு வளர்ந்து, பிறந்த தேய்ந்து என்று இப்படிச் சாபம் கொடுத்தார் என்பதுதானே நம்முடைய நம்பிக்கை...

நமக்குத் தெரிந்த கதை அது. அதனாலே என்ன? மற்ற நாடுகளிலே, இப்படிப்பட்ட கதைகள் எதுவுமேவா இல்லை...?

இதைவிட வேடிக்கையான கதைகள் உண்டு மற்ற நாடுகளிலேயும். ஆனா, அந்த நாட்டுக்காரர்கள் அந்தக் கதைகளையே நம்பிக்கிடந்துவிடாமல், ஒவ்வொன்றையும் துருவித் துருவி ஆராய்ந்து பல புதிய உண்மைகளைக் கண்டுபிடித்தார்கள்.

பொன்னி சொன்னுளே, சந்திரனில் கடல்கள் இருப்பதாக, ஏழு! அந்தக் கடல்களைப்பத்திய அற்புதம் ஒன்று சொல்லட்டுமா...அந்தக் கடல்களில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் கிடையாது!

ஏண்டி, பொன்னி! அப்படியா? கடல்கள் என்று பெயர். தண்ணீரே கிடையாதா?

ஆமாம், ஏழு! தண்ணீர் கிடையாது. அந்த இடங்கள் பெரிய பெரிய பள்ளங்கள் — ஆழமான, அகலமான—நீளமான பரப்புகள்— கடல்போல விரிந்து பரந்து இருப்பதால் கடல் என்று பெயர்—ஆனல் தண்ணீர் கிடையாது...

என்னென்ன அதிசயங்கள் நம்முடைய காலத்திலேயே நடந்து நாம் பார்க்கப்போகிருேமோ தெரியவில்லை.

ஒவ்வொருநாளும் ஒரு புது அதிசயம் நடந்தபடி இருக்கிறது.

இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளை நடத்திக்கொண்டே இருக்கிருர்கள் அந்த நாடுகளிலே...

ஆமாம்; நாம் இங்கே இன்னமும் தத்துவார்த்தம் பேசிக் கொண்டு இருக்கிருேம்.

பொன்னி! ஒரே அடியாகக் குறை பேசாதே. நம்முடைய நாட்டிலேயும் இப்போது, விஞ்ஞான ஆராய்ச்சியிலே ஈடுபட்டு வேலை செய்து கொண்டிருக்கிருர்கள். ஜவார்லால், விஞ்ஞானத்திலே நிரம்ப நம்பிக்கை, ஆர்வம், கொண்டவர் அவர் ஆராய்ச்சிகள் செய்யப்பட வேண்டும் என்பதற்காக எத்தனை கோடி

களானுலும் செலவழிக்கச் சொன்ஞர்.

அதை நான் ஒத்துக்கொள்கிறேன், பட்டு! ஆனல் மற்றவர்களுக்கு அந்தவிதமான மனப்பான்மை இருப்பதாகத் தெரியவில்லையே......

இதைச் சொல்லு பொன்னி! கடல் நீரிலிருந்து, உப்பை நீக்கிவிட்டு நல்ல தண்ணீர் ஆக்க முடியுமாமே. உண்மையா? எங்களவர் அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.

உண்மைதான். அமெரிக்காவிலே இப்போது சில இடங்களில் நடந்து வருகிறதே அந்த ஆராய்ச்சித் திட்டம். அதுமட்டுமா! கடலின்வேகத்திலிருந்து மின்சாரம் எடுக்கலாம். இங்கில ந்திலே ஒரு திட்டம் போட்டிருக்கிருர்கள்.

கடல் நீரைக் காய்ச்சினல் உப்பு தங்கிவிடும், ஆவியாகப்போவதைக் குளிரச் செய்து நல்ல தண்ணீராக்கலாம் என்கிருர்கள், புரிகிறது. ஆனல் கடல் நீரிலிருந்து மின்சாரம் எப்படி எடுப்பது?

ஏன் முடியாது ஏமு! கடல் நீரை, யந்திரக் குழாய்கள் மூலம் கொண்டு வந்து, தேக்கங்களில் சேர்ப்பது. அந்தத் தேக்கங்களை உயரமான இடத்திலே அமைத்து, பிறகு தேக்கப்பட்ட தண்ணீரை உயரத்திலிருந்து கீழே விழச் செய்வது; அந்தத் தண்ணீர் விழும் வேகத்தில், மின்சாரத்தை, இயந்திரங்கள் கொண்டு உண்டாக்குவது. இது போல இங்கிலாந்தில் செய்கிருர்கள். பரீட்சைத் திட்டம் நடத்தப்படுகிறது.

அந்த நாடுகளிலே உள்ளவர்கள், அதிசயம் அற்புதம் கண்டுபிடிக்க வேண்டும் என்பதிலே அவ்வளவு ஆர்வம் காட்டுகிருர்கள்...

நாமோ, நமது புராணக் கதைகளிலே உள்ள அற்புதங்களையும் அதிசயங்களையும் சொல்லிச் சொல்லி கேட்டுக் கேட்டு வாய் பிளந்துகொண்டு இருக்கிறேம்.

கடவுளிடம் நம்பிக்கை இருக்க வேண்டும், ஒழுக்கமாக நடக்க வேண்டும் என்ற எண்ணத்தை மறவாமல் இருப்பதற்காக, புராணம் படிப்பது கேட்பது...இதெல்லாம்...

படித்ததாலும் கேட்டதாலும் எவ்வளவு ஒழுக்கமும் சக்தியும் ஏற்

பட்டுவிட்டது என்பதுதான் வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறதே. மிளகாய்ப்பொடி தயாரிக்கும் ஒரு கம்பெனி குதிரைச்சாணியை உலர்த்தி பொடியாக்கி அதைக் கலந்து விற்கிருர்களாம், தெரியுமா? குதிரைச் சாணியிலே உள்ள நெடியும் மிளகாய் நெடியும் கலந்துவிட்டால் எது எந்த நெடி என்று தெரியாதாம்...

அடப் பாவிகளே! இப்படியும் ஒரு அக்ரமமா, அநியாயமாக இருக்கிறதே, பொன்னி!

இந்த அநியாயத்தைச் செய்து இலட்சாதிகாரி ஆகிருர்களே அவர்கள் என்ன, கோயிலுக்குப் போகாதவர்களா, பக்தி செய்யாதவர்களா...?

அவர்கள் வேஷதாரிகள் — கபட வேஷதாரிகள். கடவுள் பெயரைச் சொல்லிக்கொண்டு ஊரை ஏய்ப்பவர்கள்...

ஆமாம்! அது எப்போது தெரிகிறது? அவர்களுடைய சூது கண்டுபிடிக்கப்பட்ட பிறகு! அது வரையில், அவர்களை பக்தர்கள் என்றுதானே ஏற்றுக்கொள்கிறேம் கொண்டாடுகிறேம்.

அது இருக்கட்டும், பொன்னி. இப்படிப்பட்ட கலப்பட வேலை— செய்பவர்களைச் சும்மா விட்டுவிடக் கூடாது.

கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்று டாக்டர் ராதாகிருஷ்ணன்கூடப் பேசியிருக்கிருர். இல்லையா, பொன்னி!

ஆமாம், அவர் பேசினர். நந்தா பேசுகிருர். நாமும் பேசுகிறேர். பலன்? மானைக் கொல்லும் புலிபோல இந்த சமூக விரோதிகள் ஏழைகளைக் கொன்று தின்றபடிதான் இருக்கிருர்கள். இப்படிப்பட்டவர்களுக்கு, இப்போது இரண்டு வேஷம் போட்டுக்கொண்டு தப்பித்துக்கொள்ள முடிகிறது; ஒன்று பக்தராக வேஷம்; மற்ருென்று காங்கிரஸ்காரர் வேஷம்.

காங்கிரசுக்கே கெட்ட பெயர்டி பொன்னி! இப்படிப்பட்ட நிலைமைகளாலே.

வெளியே பேசக்கூடாதாமே இந்த விஷயங்களை.

பேசாவிட்டால் விஷயம் எப்படி சர்க்கார் காதுக்கு எட்டும்?

உனக்குத் தெரிகிறது ஏமு! அந்த அருமை. ஆனல் காங்கிரஸ்காரர்

எடுத்து வெளியே சொல்லும் கட்சிகளை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று துடியாத் துடிக்கிருர்களே.

எனக்கு ஒரு வழக்கு நினைவிற்கு வருகிறது; ஏமு கேலி செய்யாமலிருந்தால், சொல்கிறேன்.

சொல்லு பட்டு! கேலி எதுவும் செய்யமாட்டேன், சொல்லு.

ஒரு பெரிய ஓட்டல் முதலாளிமீது அந்த ஓட்டலில் வேலை செய்பவன வழக்கு போட்டான். ரொம்பச் சுவையான வழக்கு...

குறுக்கிடவேண்டி வருகிறது பட்டு! கோபிக்காதே. ஓட்டல் முதலாளி காங்கிரஸ்காரர்தானே.

ஆமாமாம்! அவருடைய ஓட்டல் மாடியிலேதான் மண்டல காங்கிரஸ் கமிட்டி ஆபீசே இருக்கிறது.

ஓட்டலில் வேலை செய்யும் ஆசாமி —கேஸ் போட்டானே—அவன் என்ன, சழகமா?

செச்சே! அவன் விேைபா கட்சி. அதாவது விேைபாவிடம் அவனுக்கு பற்று; ஆனல் காங்கிரசுக்குத்தான ஓட்டு போடுவான்; கதர்தான் கட்டுவான்; நல்லவன்.

அவனுக்கும் ஓட்டல் முதலாளிக்கும் என்ன விவகாரம்? அரசியல் தகராறு

அரசியல் தகராறு இல்லை. அவன் ஒரு நாள், இருநூறு ரூபாய் பெறுமானமுள்ள 'பாதாம்கீரை' சாக்கடையிலே ஊற்றிவிட்டான்.

இது திமிர்தானே, பட்டு! பாதாம் கீர், வியாபாரத்துக்காக அந்த முதலாளி தயாரிககிருன். அவனிடம் இவன் வேலைக்கு இருக்கிருன். அவனுடைய உப்பைத் தின்கிருன். உப்பிட்டவனுக்குத் துரோகம் செய்வதா? பாதாம்கீரை சாக்கடையில் கொட்டுவதா!

ஏமு! உனக்கென்ன அந்த ஓட்டல் முதலாளிக்கு வருவதைவிட அதிகக் கோபம் வருகிறதே. ஏதாவது தக்ககாரணமில்லாமல், பாதாம் கீரைச் சாக்கடையில் கொட்ட அவனுக்கு என்ன பைத்தியமா, வெறியா...

நான் சொல்வதற்குள் நீங்களே சண்டை போட்டுக் கொள்கிறீர்களே. நான் வழக்கு எப்படி நடந்ததோ அந்த முறையில் சொல்லிக் கொண்டு வருகிறேன். இவன் என்

அறைப்பது — மாதச் சம்பளம், சோறு போட்டு முப்பது ரூபாய்— இன்ன தேதியில் இவன் என்னைக் கெடுக்கவேண்டும், நஷ்டம் உண்டு பண்ணவேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன், யாரோ என்னுடைய எதிரிகளின் தூண்டுதலால், நான் தயாரித்து வைத்திருந்த இருநூறு ரூபாய் பெறுமானமுள்ள பாதாம்கீர் முழுவதையும், சாக்கடையில் கொட்டிவிட்டான் என்று முதலாளி சொன்னார்.

அந்த வேலையாள் என்ன சொன்னான்? கைநழுவி பாத்திரம் விழுந்துவிட்டது என்றானா?

இல்லை! இல்லை! ஆமாம் செய்தேன் என்றான்.

இது போக்கிரித்தனம் தானே. என்ன வேண்டுமானாலும் செய்துகொள் என்ற போக்குதானே.

முழுவதையும் சொல்ல விடமாட்டேனென்றால் நான் என்ன செய்வது...

ஏமு! குறுக்கே மறுத்துப் பேசாமல், பட்டுவை அவள் போக்குக்கு விட்டால்தானே, அவளால் அவள் நடத்திய வழக்கை எடுத்து விளக்கமாகச் சொல்ல முடியும்.

பொன்னி! நீயும் ஆரம்பித்து விட்டயா கேலி பேச. நான் இந்த வழக்கை நான் நடத்தியதாகவா சொன்னேன். இது ஒருபுத்தகத்திலே வந்தது.

அப்படியா! நீ சொல்லிக்கொண்டு வந்ததைக் கேட்கும்போது, வழக்கை நீயே நடத்தியதுபோல ஒரு பிரமை ஏற்பட்டது. தப்பாக எண்ணிக்கொள்ளாதே. சொல்லு, மேலே.

பாதம்கீர் ஏன் கொட்டினாய் என்று கேட்டார் நீதிபதி. ஐயா! பாதாம்கீர் தயாராகி ஒரு பாததிரத்தில் ஊற்றிவைத்தார்கள். அதிலே ஒரு பல்லி விழுந்துவிட்டது. அதை நான் பார்த்து பதறிப்போனேன். அதைப் பாத்துவிட்ட இன்னொரு ஆள்,—முதலாளியின் மைத்துனன ஓடிப்போய் முதலாளியிடம் சொன்னான். அவர் ஓடோடி வந்து யாருக்கும் தெரியக்கூடாது — மூச்சுவிடாதீர்கள் என்று உத்திரவு போட்டுவிட்டு, பல்லியை ஒரு கரண்டியால் எடுத்து வெளியே போட்டுவிட்டு, பாதாமகீர் விற்க ஏற்பாடு செய்தார். நான் தடுத்தேன். பல்லி செத்து விஷமாகி பாதாம்கீரைக் கெடுத்து விட்டது, இதை யாரும் சாப்பிடக்கூடாது—பாபம் — சட்ட விரோதம் —கெடுதல்—என்று கெஞ்சினேன் காலில்கூட விழுந்தேன். அவர் கேட்கவில்லை—மிரட்டினார் — அடித்தார்—இம்சை செய்தார்.

நல்லது செய்யப்போனவனுக்கு, பார்டி பொன்னி! எத்தனை கஷ்டம்!

அடிபட்டுக்கொண்ட பிறகுகூட ஏமு! அவன் அந்த பாதாம்கீர் பாத்திரத்தைக் கீழே உருட்டிவிட்டான்; பாதாம்கீர் சாக்கடையில் போயிற்று...

அப்படிச் செய்யாமல் பாதாம்கீர் விற்றிருந்தால், சாப்பிட்டவர்கள் கதி என்ன ஆகி இருக்கும்?

அதை எல்லாம் அவன் எடுத்துச் சொன்னான். அழுதான்.

வழக்கு எப்படி முடிந்தது பட்டு! அதைச் சொல்லு.

ஐம்பது ரூபாய் அபராதம் போட்டார்கள்.

விஷமாகிப்போன பாதாம்கீரை விற்க முயன்றவனுக்கு ஐம்பது ரூபாய்தானா அபராதம்! ஆறு மாதம் ஜெயில் கொடுத்திருக்க வேண்டும்.

பைத்யம் உனக்கு ஏமு! அபராதம் யாருக்கு? பாதாம்கீரை சாக்கடையில் கொட்டினானே அவனுக்கு, அப்படித்தானே பட்டு?

ஆமாம்! உனக்கெப்படித் தெரியும்?

இதென்ன பொன்னி அநியாயம்! ஊருக்கு உதவி செய்தவனுக்கா அபராதம்? என்ன காரணம்?

அதுவா ஏமு! பாதாம்கீரை அவன் சாக்கடையில் கொட்டினான் என்பதற்குத்தான் சாட்சிகள் இருந்தன. பாதாம்கீரில் பல்லி விழுந்திருந்தது என்பதற்குச்சாட்சியில்லையே...

இப்போது தெரிகிறதா ஏமு! உலகம்!!

தெரிகிறதா என்று கேட்கிறே, பொன்னி! எரிகிறது உடம்பு மனசு எல்லாம். இப்படி விஷயம் இருந்தா, எந்த நியாயம் நிலைக்கும், யார் ஊருக்கு உதவி செய்ய முன்வருவார்கள். எனக்கு என்ன தோணுது தெரியுமா. நம்மைப்போல நாலு பெண்கள், மளமளன்னு போகணும் அந்த ஓட்டல் முதலாளியைப் பார்த்து அடப்பாவி! இந்த அநியாயம் செய்யலாமா, இது தகுமா, இது தர்மமா என்று கேட்டு, ஊர் சிரிக்க வைக்கணும்.

என்றையத்தினம் போவது, எப்படிச் செய்வது என்ற விவரமெல்லாம், அதோ உங்களவர் வருகிறார் அவரிடமே கேட்டு திட்டம் போட்டு வை ஏமு! நாங்கள் இப்ப போய் விட்டு வருகிறோம்; உன் திட்டம் தயாரானதும்; அதன்படியே செய்வோம். வா பட்டு!

அண்ணாவின் கருத்தோவியங்கள்

பார்வையின் பயணம் விலை 1·50
அரசாண்ட ஆண்டி ,, 1·50
மதுரைக்கு டிக்கெட் இல்லை

கிடைக்குமிடம் :

பரிமளம் பதிப்பகம் ◇ சின்னகாஞ்சீபுரம்.

JAYA

சின்ன காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "அல்லி" அச்சகத்தில், (உரிமையாளர்) சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.